# ஔவையார் பாடல்கள் (4)

# (ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம்)

# மூலமும் ஆறுமுக நாவலர் உரையும்

## auvaiyAr pATalkaL – mUlamum,

## Arumuka nAvalar uraiyum

## In tamil script, unicode/utf-8 format

**Acknowledgements:**

Our Sincere thanks go to the Tamil Virtual Academy for providing a scanned image/PDF of this work.

The e-text has been generated using Google OCR online tool and subsequent proof-reading.

We thank Mr. R. Navaneethakrishnan for his assistance in the proof-reading of this work.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

**© Project Madurai, 1998-2020.**

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website

https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

# ஔவையார் பாடல்கள் (4)
# (ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம்)
# மூலமும் ஆறுமுக நாவலர் உரையும்

**Source:**

ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடியும், கொன்றைவேந்தனும்;

ஔவையார் அருளிச்செய்த நல்வழி; ஔவையார் அருளிச்செய்த மூதுரை என்று வழங்குகின்ற வாக்குண்டாம்

ஆறுமுக நாவலர் (1822-1879) உரை

சென்னபட்டணம் : வித்தியாநுபாலனயந்திரசாலை, 1914-1917-1921

--------------

## 1. ஔவையார் பாடல்கள் - ஆத்திசூடி
## மூலமும் ஆறுமுக நாவலர் உரையுடன் விளக்கவுரையும்

**கடவுள் வாழ்த்து**

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோ மேயாமே.

[ப-உ] ஆத்தி - ஆத்தியென்னும், பூவாலாகிய மாலையை, சூடி - தரிப்பவராகிய சிவபெருமான், அமர்ந்த - விரும்பிய, தேவனை - விநாயகக் கடவுளை, யாம் - நாம், ஏத்தி ஏத்தி - பல முறை துதித்து, தொழுவோம் – வணங்குவோம்..

[க-உ] சிவபெருமான் விரும்பிய விநாயகக் கடவுளை நாம் பல முறை துதித்து வணங்குவோம். ஏ - அசை

1. அறஞ்செய விரும்பு.

[ப-உ] அறம் – தருமத்தை, செய - செய்வதற்கு, விரும்பு - ஆசைப்படு.

[க-உ] நீ தருமத்தைச் செய்வதற்கு ஆசைப்படுவாய்.

2. ஆறுவது சினம்.

[ப-உ] ஆறுவது - தணியவேண்டுவது, சினம் - கோபமாகும்.

[க-உ] கோபம் தணியத் தகுவதாகும்.

3. இயல்வது கரவேல்.

[ப-உ] இயல்வது - (உன்னால் கொடுக்கக்) கூடிய பொருளை,
கரவேல் - (யாசிப்பவர்களுக்கு) நீ ஒளிக்காதே.
[க-உ] உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை நீ யாசிப்பவர்களுக்கு ஒளிக்காமல் கொடுப்பாயாக.

4. ஈவது விலக்கேல்.

[ப-உ] ஈவது - (ஒருவர் மற்றொருவருக்குக்) கொடுப்பதை, விலக்கேல் - நீ தடுக்காதே.

[க-உ] ஒருவர் மற்றொருவருக்குக் கொடுப்பதைக் கொடுக்காதபடி நீ தடுக்காதே.

5. உடையது விளம்பேல்.

[ப-உ] உடையது - (உன்னிடத்து) உள்ள பொருளை, விளம்பேல் - (பிறர் அறியும்படி) நீ சொல்லாதே.
[க-உ] உன்னிடத்திருக்கும் பொருளை நீ பிறருக்குத் தெரிவிக்காதே.

6. ஊக்கமது கைவிடேல்.

[ப-உ] ஊக்கம் - முயற்சியை, கைவிடேல் - நீ கைவிடாதே; அது - பகுதிப் பொருள் விகுதி.
[க-உ] நீ ஒரு காரியம் செய்யும்பொழுது உனது முயற்சியில் தளராதே.

7. எண்ணெழுத் திகழேல்.

[ப-உ] எண் - கணக்கையும், எழுத்து - இலக்கணத்தையும், இகழேல் - நீ தாழ்வாகப் பேசாதே.
[க-உ] கணக்கையும் இலக்கணத்தையும் இகழாமல் கற்றுக் கொள்.

8. ஏற்ப திகழ்ச்சி.

[ப-உ] ஏற்பது - (ஒருவரிடத்தில் சென்று) யாசிப்பது, இகழ்ச்சி - பழிப்பாகும்.

[க-உ] ஒருவரிடம் சென்று யாசிப்பது இழிவாகும்.

9. ஐயமிட் டுண்.

[ப-உ] ஐயம் - பிச்சையை, இட்டு - (யாசிப்பவர்களுக்குக்) கொடுத்து, உண் - நீ உண்பாயாக.

[க-உ] யாசிக்கும் ஏழைகளுக்குப் பிச்சையிட்டுப் பிறகு நீ உண்பாயாக.

10. ஒப்புர ஒழுகு.

[ப-உ] ஒப்புரவு - உலக நடையை (அறிந்து), ஒழுகு - (அதன்படி) நீ நடப்பாயாக.

[க-உ] நீ உலகத்தாரோடு பொருந்தும்படி நடப்பாயாக.

11. ஓதுவ தொழியேல்.

[ப-உ] ஓதுவது - (எப்பொழுதும்) படிப்பதை, ஒழியேல் - நீ விடாதே.

[க-உ] நீ நல்ல புத்தகங்களை எப்போதும் படித்துக்கொண்டிரு.

12. ஔவியம் பேசேல்.

[ப-உ] ஔவியம் - பொறாமைச் சொல்லை, பேசேல் - நீ பேசாதே.

[க-உ] நீ ஒருவரிடத்தும் பொறாமை கொண்டு பேசாதே.

13. அஃகஞ் சுருக்கேல்.

[ப-உ] அஃகம் - (நெல் முதலிய) தானியங்களை, (அதிக இலாபத்தைக் கருதி), சுருக்கேல் - நீ குறைத்து விற்காதே.

[க-உ] அதிக இலாபம் அடையவேண்டி, தானியங்களை நீ குறைத்து விற்காதே.

14. கண்டொன்று சொல்லேல்.

[ப-உ] கண்டு - (ஒன்றைப்) பார்த்து, ஒன்று - வேறொன்றை, சொல்லேல் - நீசொல்லாதே.

[க-உ] நீ கண்ணால் பார்த்ததற்கு மாறாகப் பேசாதே. பொய் சாட்சி சொல்லக் கூடாதென்பதாம்.

15. ஙப்போல் வளை.

[ப-உ] ஙப்போல் - ஙகரத்தைப் போல், வளை - நீ (உன்னுடைய இனத்தாரைத்) தழுவு.

[க-உ] ங என்னும் எழுத்துத்தான் மாத்திரம் பயனுடையதாயிருந்து பயனில்லாத ஙா, ஙி முதலிய தன்னுடைய இனவெழுத்துக்களைத் தழுவிக் கொள்வது போல, நீ பயனுடையவனாயிருந்து உன்னுடைய இனத்தார் பயனில்லாதவராயினும் அவரை விலக்கிவிடாமல் தழுவிக் கொள்ளுதல் வேண்டும் என்பது பொருள்.
ஙா முதலிய பதினோரெழுத்தும் எச்சொல்லிலும் வருவதில்லை. ஆனால் அவைகளை நம் முன்னோர் ஙகரத்தின் பொருட்டே சுவடியில் அமைத்திருக்கிறார்கள்.
[க-உ] ஙகரம் எவ்விதம் பயனில்லாத தன் இனவெழுத்துக்களைத் தழுவியுள்ளதோ அது போலவே நீயும் பயனில்லாதவராகிய உன் சுற்றத்தார்களைத் தழுவிக்கொண்டு அவர்களையும் ஆதரிப்பாயாக.

16. சனி நீராடு.

[ப-உ] சனி - (பூமியிலிருந்து) தோன்றுகின்ற, நீர் - நீரில், ஆடு - நீ குளிப்பாயாக.

பூமியிலிருந்து சுரக்கின்ற ஊற்றுநீர், உலோகச் சத்துப் பொருளைக் கொண்டுள்ளதால், அது உடல் நலத்துக்கு மிகவும் நல்லதாகும்.
[க-உ] ஊற்று நீரில் நீ குளிப்பாயாக.
சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்து முழுகு என்றும் இதற்குப் பொருள் கூறுவர்.

17. ஞயம்பட வுரை.

[ப-உ] ஞயம்பட - அழகு பொருந்த, உரை - நீ பேசு.

[க-உ] கேட்போருக்கு இன்பமுண்டாகும்படி அழகாகப் பேசு. ஞயம் - நயம்.

18. இடம்பட வீடெடேல்.

[ப-உ] இடம்பட - வெற்றிடம் உண்டாகும்படி, வீடு - வீட்டை, எடேல் - நீ கட்டாதே.

[க-உ] வெற்றிடமாகக் கிடக்கும்படி வீட்டைப் பெரிதாகக் கட்டாதே.

19. இணக்கமறிந் திணங்கு.

[ப-உ] இணக்கம் - (நட்புக் கொள்ளுதற்குரிய) நற்குணங்களை,

அறிந்து - ஆராய்ந்தறிந்து, இணங்கு - நீ நட்புக்கொள்.

[க-உ] ஒருவருடைய நற்குணத்தை அறிந்த பிறகு அவரோடு நீ நட்புக் கொள்ளுவாய்.

20. தந்தை தாய்பேண்.

[ப-உ] தந்தை - தகப்பனாரையும், தாய் - தாயாரையும், பேண் - நீ காப்பாற்று.

[க-உ] உன்னுடைய தாய், தந்தையரை நீ அன்புடன் காப்பாற்றுவாயாக.

21. நன்றி மறவேல்.

[ப-உ] நன்றி - (ஒருவர் செய்த) உபகாரத்தை, மறவேல் - நீ மறக்காதே.

[க-உ] ஒருவர் செய்த உபகாரத்தை ஒருபோதும் நீ மறக்காதே.

22. பருவத்தே பயிர்செய்.

[ப-உ] பருவத்தே - தகுந்த காலத்தில், பயிர்செய் - நீ பயிரிடுக.

[க-உ] விளைவதற்கு ஏற்ற காலத்தை அறிந்து நீ பயிரிடுவாய்.

23. மண்பறித் துண்ணேல்.

[ப-உ] மண் - ஒருவருடைய நிலத்தை, பறித்து - கவர்ந்து கொண்டு, உண்ணேல் - நீ சீவிக்காதே.

[க-உ] ஒருவருக்குரிய நிலத்தை அநியாயமாக அபகரித்துக் கொண்டு அதனால் வரும் பொருளை உண்டு வாழாதே.

“மன்று பறித் துண்ணேல்” என்றும் பாடம்.

24. இயல்பலா தனசெயேல்.

[ப-உ] இயல்பு அலாதன - இயற்கைக்கு மாறுபட்ட காரியங்களை, செயேல் - நீ செய்யாதே.

[க-உ] தீய காரியங்களை நீ செய்யாதே.

25. அரவ மாட்டேல்.

[ப-உ] அரவம் - பாம்புகளை, ஆட்டேல் - நீ பிடித்து ஆட்டாதே.

[க-உ] நீ பாம்புகளைப் பிடித்து விளையாடாதே.

26. இலவம் பஞ்சிற் றுயில்.

[ப-உ] இலவம் பஞ்சில் - இலவம் பஞ்சால் செய்த மெத்தையில், துயில் - நீ தூங்குவாய்.

[க-உ] இலவம் பஞ்சு மெத்தையில் நீ தூங்குவாய்.

27. வஞ்சகம் பேசேல்.

[ப-உ] வஞ்சகம் - கபடமான சொற்களை, பேசேல் - நீ பேசாதே.

[க-உ] கபடமான சொற்களை நீ சொல்லாதே.

28. அழகலா தனசெயேல்.

[ப-உ] அழகு அலாதன - அழகில்லாத காரியங்களை, செயேல் - நீ செய்யாதே.

[க-உ] நீ இழிவான காரியங்களைச் செய்யாதே.

29. இளமையிற் கல்.

[ப-உ] இளமையில் - இளமைப் பருவத்திலேயே, கல் -நீ கல்வியைக் கற்றுக் கொள்.

[க-உ] இளம் பருவத்திலேயே நீ கல்வி கற்கவேண்டும்.

30. அறனை மறவேல்.

[ப-உ] அறனை - தருமத்தை, மறவேல் - நீ மறக்காதே.

[க-உ] தருமத்தை மறக்காமல் செய்வாயாக.

31. அனந்த லாடேல்.

[ப-உ] அனந்தல் - தூக்கத்தை, ஆடேல் - நீ அதிகமாகச் செய்யாதே.

[க-உ] அதிகமாக நித்திரை செய்யாதே.

32. கடிவது மற.

[ப-உ] கடிவது - (ஒருவரை) கோபித்துப் பேசுவதை, மற - நீ மறந்து விடு.

[க-உ] எவரையும் கோபத்தால் கடிந்துபேசுவதை நீ மறந்து விடு.

33. காப்பது விரதம்.

[ப-உ] காப்பது - (உயிர்களுக்கு) ஒரு தீங்கும் செய்யாமல் அவைகளைக் காப்பாற்றுவதே, விரதம் - நோன்பாகும்.

[க-உ] பிற உயிர்களைக் காப்பதே விரதமாகும்.

34. கிழமைப்பட வாழ்.

[ப-உ] கிழமைப்பட - (உன்னுடைய பொருள் பிறருக்கு) உரிமைப் படும்படி, வாழ் - நீ வாழு.

[க-உ] உன்னுடைய பொருள் பிறருக்குப் பயன்படும்படி நீ வாழ்வாயாக.

35. கீழ்மை யகற்று.

[ப-உ] கீழ்மை - இழிவான குணத்தை, அகற்று - நீ போக்கு.

[க-உ] நீ உன்னுடைய இழிந்த குணங்களை நீக்கிவிடுவாய்.

36. குணமது கைவிடேல்.

[ப-உ] குணம் - (உனது மேன்மையாகிய) குணத்தை, கைவிடேல் - நீ விட்டு விடாதே.

[க-உ] உனது நல்ல குணத்தை நீ கைவிடாதே.

அது - பகுதிப்பொருள் விகுதி.

37. கூடிப் பிரியேல்.

[ப-உ] கூடி - (நல்லவரோடு) சேர்ந்து, பிரியேல் - பின்பு அவரை விட்டு நீங்காதே.

[க-உ] நல்லவரோடு சிநேகம் செய்து பிறகு அவரைவிட்டு நீங்காதே.

38. கெடுப்ப தொழி.

[ப-உ] கெடுப்ப - (ஒருவருக்குக்) கெடுதி செய்தவதை, ஒழி - நீ நீக்கு.

[க-உ] ஒருவருக்குக் கெடுதி செய்வதை நீ ஒழித்துவிடுவாய்.

39. கேள்வி முயல்.

[ப-உ] கேள்வி - (கற்றவர் சொல்லும் நூற்பொருளைக்) கேட்டலுக்கு, முயல் - நீ முயற்சி செய்.

[க-உ] கற்றறிந்தார் சொல்லும் நூற்பொருளைக் கேட்பதற்கு நீ முயற்சி செய்வாய்.

40. கைவினை கரவேல்.

[ப-உ] கைவினை - (உனக்குத் தெரிந்த) கைத்தொழிலை, கரவேல் - நீ ஒளிக்காதே.

[க-உ] உனக்குத் தெரிந்த கைத்தொழிலை நீ பிறருக்குக் கற்பிக்க மறைக்காதே.

41. கொள்ளை விரும்பேல்.

[ப-உ] கொள்ளை - (பிறருடைய பொருளைக்) கொள்ளையிடுவதற்கு,
விரும்பேல் - நீ ஆசைப்படாதே.
[க-உ] பிறர் பொருளை அபகரிக்க நீ விரும்பாதே.

42. கோதாட் டொழி.

[ப-உ] கோது - குற்றமான, ஆட்டு - விளையாட்டை, ஒழி - நீ நீக்கிவிடுவாய்.

[க-உ] குற்றமான விளையாட்டை நீ ஒழித்து விடுவாய்.

43. கௌவை அகற்று.

(இது விடுபட்டிருக்கிறது)

43. சக்கர நெறிநில்.

[ப-உ] சக்கர நெறி - (அரசனுடைய ஆணைச்) சக்கரம் செல்லும் வழியில்,
நில் - நிற்பாய்.
[க-உ] அரசன் கட்டளைப்படி நீ நடப்பாயாக.

44. சான்றோ ரினத்திரு.

[ப-உ] சான்றோர் - அறிவினால் நிறைந்தவருடைய, இனத்து - கூட்டத்திலே,
இரு - நீ எப்போதும் இரு.
[க-உ] அறிவு ஒழுக்கத்தால் சிறந்த பெரியோர்களின் கூட்டத்தைச் சேர்ந்திரு.

45. சித்திரம் பேசேல்.

[ப-உ] சித்திரம் - (மெய்போலச் சித்திரித்துப்) பொய்ம்மொழிகளை,
பேசேல் - நீ பேசாதே.
[க-உ] பொய்யை மெய் போலச் சித்திரித்துப் பேசாதே.

46. சீர்மை மறவேல்.
[ப-உ] சீர்மை - நன்னடக்கையை, மறவேல் - மறந்து விடாதே.
[க-உ] நீ நன்னடக்கையை என்றும் மறவாதே.

47. சுளிக்கச் சொல்லேல்.
[ப-உ] சுளிக்க - (கேட்பவர்) கோபிக்கும்படி, சொல்லேல் - நீ (ஒன்றையும்) சொல்லாதே.
[க-உ] கேட்போர் கோபிக்கும்படி நீ பேசாதே.

48. சூது விரும்பேல்.
[ப-உ] சூது - சூதாடுதலை, விரும்பேல் - நீ விரும்பாதே.
[க-உ] நீ சூதாடுவதை விரும்பாதே.

49. செய்வன திருந்தச்செய்.
[ப-உ] செய்வன - செய்யுங் காரியங்களை, திருந்த - செம்மையாக, செய் - நீ செய்வாய்.
[க-உ] நீ செய்யும் காரியங்களைத் திருத்தமாகச் செய்வாயாக.

50. சேரிட மறிந்துசேர்.
[ப-உ] சேரிடம் - அடையத் தகும் (நல்) இடத்தை, அறிந்து - தெரிந்து கொண்டு,
சேர் -நீ சேர்வாயாக.
[க-உ] நீ சேரிடம் நல்லதா என்பதை அறிந்த பிறகே சேர்வாயாக.

51. சையெனத் திரியேல்.
[ப-உ] சையென - (பெரியோர் உன்னைச்) சீ யென்று வெறுக்கும்படி,
திரியேல் - நீ திரியாதே.
[க-உ] பெரியோர்கள் உன்னைச் சீ என்று இகழும்படி நீ திரியாதே.

52. சொற்சோர்வு படேல்.

[ப-உ] சொல் - (பேசும்) சொற்களில், சோர்வு படேல் - நீ மறதி உண்டாகும்படி பேசாதே.

[க-உ] சொல்ல வேண்டுவதை, நீ மறவாமல் சொல்வாயாக,

53. சோம்பித் திரியேல்.

[ப-உ] சோம்பி - சோம்பல் கொண்டு, திரியேல் - நீ (முயற்சியின்றித்) திரியாதே.

54. தக்கோ னெனத்திரி.

[ப-உ] தக்கோன் என -- (உன்னைப் பெரியோர்கள்) தகுதி யுடையவன் என்று சொல்லும்படி,

திரி - நீ நட.

[க-உ] பெரியோர்கள் உன்னை நல்லவன் என்று சொல்லும் படி நீ நடந்து கொள்வாயாக.

55. தானமது விரும்பு

[ப-உ] தானம் -- (தக்கோர்க்கு) தானம் செய்தலை, விரும்பு - நீ ஆசைப்படு.

அது--பகுதிப்பொருள் விகுதி.

[க-உ] தகுதி யுடையவர்களுக்குத் தானம் கொடுத்தலை நீ விரும்புவாயாக.

56. திருமாலுக் கடிமைசெய்

[ப-உ திருமாலுக்கு - விஷ்ணு மூர்த்திக்கு, அடிமை செய் - நீ தொண்டு செய்வாய்.

[க-உ] விஷ்ணு மூர்த்திக்கு நீ அடிமைப்பட்டு, அவனுக்குத் தொண்டு செய்வாயாக.

57. தீவினை யகற்று.

[ப-உ] தீவினை பாவமான காரியங்களை அகற்று - (செய்யாமல்) விலக்கு.

[க-உ] பாவ காரியங்களை நீ விலக்கி விடுவாய்.

58. துன்பத்திற் கிடங்கொடேல்

[ப-உ ] துன்பத்திற்கு - (உடல்) வருத்தத்திற்கு, இடம் கொடேல் - (சிறிதேனும்) இடம் கொடுக்காதே.

[க-உ] ஒரு காரியத்தைச் செய்யும்போது நீ உடல் வருத்தம் பாராதே.

59. தூக்கி வினை செய்.

[ப-உ ] தூக்கி - (முடிக்கும் உபாயத்தை)ஆராய்ந்து, வினை - ஒரு தொழிலை , செய் - நீ செய்வாயாக.

[க-உ ]முடித்தற்குரிய உபாயத்தை ஆராய்ந்து நீ ஒரு காரியம் செய்வாயாக.

60. தெய்வ மிகழேல்.

(ப-உ ] தெய்வம் - கடவுளை, இகழேல் - நீ பழிக்காதே.

[க-உ) நீ கடவுளை இகழ்ந்து பேசாதே.

61. தேசத்தோ டொத்துவாழ்.

[ப-உ] தேசத்தோடு -- ( வாசம் பண்ணும்) தேசத்திலுள்ளவரோடு , ஒத்து வாழ் - பகையின்றிப் பொருந்தி வாழ்.

[க-உ] நீ வாழும் தேசத்தாரோடு விரோதமின்றிக் கலந்து வாழ்வாயாக.

62. தையல் சொற் கேளேல்.

[ப-உ ] தையல் - (நற்குணமில்லாத) மனைவியின், சொல் - வார்த்தைகளை, கேளேல் - நீ கேட்காதே.

[க-உ) நற்குண மில்லாத மனைவியின் சொல்லைக் கேட்டு அதன்படி நீ நடவாதே.

63. தொன்மை மறவேல்.

[ப-உ ] தொன்மை -- பழைய நட்பை , மறவேல் - நீ மறந்து விடாதே.

[க-உ] நீ பழைய சிநேகத்தை மறந்து விடாதே.

64. தோற்பன தொடரேல்.

(ப-உ] தோற்பன - தோல்வி யடையக்கூடிய வழக்குகளிலே , தொடரேல் - நீ சம்பந்தப்படாதே.

[க-உ] தோல்வி யடையக் கூடிய வழக்குகளை மேற் கொள்ளாதே.

65. நன்மை கடைப்பிடி.

[ப-உ] நன்மை - நல்லனவற்றை, கடைப்பிடி - உறுதியாகப் பிடித்துக்கொள்.

[க-உ) நன்மையானவற்றை நீ உறுதியாகப் பிடி

66. நாடொப் பனசெய்.

(ப-உ ] நாடொப்பன - நாட்டிலுள்ளார் ஒத்துக்கொள்ளும் படியான நற்செய்கைகளை, செய் - நீ செய்வாயாக.

[க-உ] நாட்டிலுள்ளார் அங்கீகரிக்கக்கூடிய நற் செயல்களை நீ செய்வாயாக.

67. நிலையிற் பிரியேல்

(ப-உ ] நிலையில் - (உனது உயர்ந்த) நிலையினின்றும், பிரியேல் - நீ நீங்காதே.

[க-உ] உன்னுடைய உயர்ந்த நிலையினின்றும் நீ தாழ்ந்து விடாதே.

68. நீர்விளை யாடேல்.

(ப-உ) நீர் -(ஆழமான) நீரிலே, விளையாடேல்-(நீந்தி) நீ விளையாடாதே.

[க-உ ] நீ ஆழமான நீர் நிலையி லிறங்கி விளையாடாதே.

69. நுண்மை நுகரேல்

[ப-உ]நுண்மை- (நோயைத் தரும்) சிற்றுண்டிகளை, நுகரேல் - உண்ணாதே.

[க-உ] நீ நோய் தரும் சிற்றுண்டிகளை உண்ணாதே.

70. நூல் பலகல்

(ப-உ ] நூல் - (உண்மை அறிவைக் கொடுக்கும்) நூல்கள், பல-பலவற்றை , கல் -நீ கற்பாயாக.

[க-உ] உண்மை யறிவைத் தரும் பல நூல்களை நீ கற்பாயாக.

71. நெற்பயிர் விளை.

(ப-உ) நெற்பயிர் - நெல் பயிரை, விளை - நீ விளைப்பாய்.

[க-உ] நீ நெல் பயிரை விளைவு செய்.

72. நேர்பட வொழுகு.

[ப-உ ] நேர்பட - (உனது ஒழுக்கம் கோணாமல்) செம்மைப் பட, ஒழுகு--நீ நட.

[க-உ] நீ ஒழுக்கம் தவறாமல் செம்மையாக நட.

73. நைவினை நணுகேல்.

[ப-உ ] நைவினை - (பிறர்) செயத்தக்க காரியங்களை, நணுகேல்- நீ அணுகாதே.

[ க-உ] பிறர் செயத்தக்க தீய வினைகளை நீ செய்யாதே.

74. நொய்ய வுரையேல்.

[ப-உ] நொய்ய - (பயனில்லாத) அற்ப வார்த்தைகளை, உரையேல் - நீ உரைக்காதே.

[க-உ) பயனற்ற அற்ப வார்த்தைகளை நீ பேசாதே.

75. நோய்க்கிடங் கொடேல்.

[ப-உ ] நோய்க்கு – வியாதிகளுக்கு, இடம் கொடேல் - நீ இடங் கொடாதே.

[க-உ] உணவு முதலியவற்றால் நோய் உண்டாவதற்கு இடம் கொடுக்காதே.

76. பழிப்பன பகரேல்.

[ப-உ ] பழிப்பன - (அறிவுடையவர்களாலேப்பழிக்கப்படுவனவாகிய) இழி சொற்களை, பகரேல் - நீ பேசாதே.

[க-உ ] பெரியோர்களால் பழிக்கப்படும் சொற்களை நீ பேசாதே.

77. பாம்பொடு பழகேல்.

[ப-உ ] பாம்பொடு – (பால் கொடுத்து வளர்ப்பவர்க்கு விடத்தைக் கொடுக்கும்) பாம்போடு, பழகேல் - நீ பழகாதே.

[க-உ] நீ பாம்பைப் பிடித்து வளர்க்காதே

78. பிழைபடச் சொல்லேல்.

[ ப-உ] பிழைபட - குற்றங்கள் உண்டாகும்படி, சொல்லேல் - நீ பேசாதே.

[க-உ] குற்றமுண்டாகும்படி நீ பேசாதே.

79. பீடு பெறநில்.

[ப-உ] பீடு --- பெருமையை, பெற - பெறும்படி, நில்-- நீ நிற்பாயாக.

[க-உ] பெருமை யடையும்படி நீ நல் வழியில் நிற்பாயாக..

80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்

[ப-உ]புகழ்ந்தாரை - (உன்னைப்) புகழ்கின்றவரை, போற்றி - நீ காத்து, வாழ்- வாழ்வாய்.

[க-உ] உன்னைப் புகழ்கின்றவரை நீ ஆதரித்து வாழ்வாயாக.

81. பூமி திருத்தியுண்

[ப-உ] பூமி - (உனது) விளை நிலத்தை , திருத்தி – உழுது, உண் -நீ உண்ணு.

[க-உ] உனது விளைநிலத்தை நீ உழுது உண்பாயாக.

82. பெரியாரைத் துணைக்கொள்.

[ப-உ] பெரியாரை - (அறிவிலே சிறந்த) பெரியவர்களை,
துணைக்கொள் - (உனக்குத்) துணையாகக் கொள்வாய்.

[க-உ] பெரியாரை (உனக்குத்) துணையாக நீ கொள்வாய்.

83. பேதமை யகற்று.

[ ப-உ ] பேதமை -- அறியாமையை, அகற்று - நீ போக்கு

[க-உ] நீ அறியாமையை நீக்கிவிடுவாய்.

84. பையலோ டிணங்கேல்.

(ப-உ] பையலோடு - சிறு பிள்ளையோடு, இணங்கேல் - நீ கூடாதே

[க-உ ] அறிவில்லாச் சிறுவரோடு நீ கூடாதே.

85. பொருடனைப் போற்றி வாழ்.

(ப-உ ] பொருள் தனை - திரவியத்தை, போற்றி - காப்பாற்றி, வாழ் - நீ வாழ்வாய்.

[க-உ ] பொருளை நீ வீண் செலவு செய்யாமல் பாதுகாத்து வாழ்வாய்.

86. போர்த்தொழில் புரியேல்.

(ப-உ] போர்த் தொழில் - சண்டையாகிய தொழிலை, புரியேல் - நீ செய்யாதே.

[க-உ] நீ யாருடனும் சண்டையிடாதே

87. மனந் தடுமாறேல்.

[ப-உ] மனம் - உள்ளம், தடுமாறேல் - கலங்காதே

[க-உ] நீ எதனாலும் மனக்கலக்க மடையாதே.

88. மாற்றானுக் கிடங்கொடேல்.

[ப-உ ] மாற்றானுக்கு - பகைவனுக்கு, இடம் கொடேல்- நீ இடம் கொடுக்காதே.

[க-உ ] நீ பகைவனுக்கு இடம் கொடாதே.

89. மிகைபடச் சொல்லேல்.

[ப-உ] மிகைபட - சொற்கள் அதிகப்படும்படி, சொல்லேல் - நீ பேசாதே.

[க-உ] வார்த்தைகளை அதிகப்படும்படி பேசாதே.

90. மீ தூண் விரும்பேல்.

[ப-உ ] மீது உண் - அதிமாக உண்ணுதலை, விரும்பேல்-நீ இச்சிக்காதே.

[க-உ ] மிகுதியாக உண்ணுதலை நீ விரும்பாதே.

91. முனைமுகத்து நில்லேல்.

[ப-உ] முனைமுகத்து - போர்க் களத்தின் முன்னே, நில்லேல் - நிற்காதே.

[க-உ] நீ போர்க் களத்தின் முனையிலே நின்று கொண்டிருக்காதே.

92. மூர்க்கரோ டிணங்கேல் .

[ப-உ] மூர்க்கரோடு - மூர்க்கத் தன்மை யுள்ளவர்களுடன்,

இணங்கேல் - நீ சிநேகம் பண்ணாதே.

[க-உ] மூர்க்க குணமுடையவரோடு சேர்ந்து பழகாதே

93. மெல்லினல்லாள் தோள்சேர்.

[ப-உ] மெல் - மென்மையான, இல் - (உன்) மனைவியாகிய, நல்லாள் - பெண்ணின்,

தோள் - தோள்களை, சேர் - நீ பொருந்துவாயாக.

[க-உ] பிறர் மனைவியை விரும்பாமல், உன் மனைவியுடன் நீ வாழ்வாயாக.

94. மேன்மக்கள் சொற்கேள்.

|-ப-உ) மேன்மக்கள் - உயர்ந்தோருடைய , சொல் - சொல்லை , கேள் - நீ கேட்டு நட.

[க-உ] நீ நல்லொழுக்க முடைய பெரியோர் சொல்லை கேட்டு அதன்படி நடப்பாயாக.

95. மைவிழியார் மனையகல்.

[ப-உ]மைவிழியார் - மை தீட்டிய கண்களால் மயக்கும் வேசையருடைய ,

மனை -- வீட்டை , அகல் - (நெருங்காமல்) நீ நீங்குவாய்.

[க-உ] நீ வேசையர் வீட்டைச் சேராமல் விலகு.

96. மொழிவ தறமொழி.

[ப-உ] மொழிவது -- சொல்லப்படும் பொருளை, அற - (சந்தேகம்) நீங்கும்படி, மொழி -- சொல்லுவாய்.

(க-உ) நீ சொல்லுவதை ஐயமின்றித் திருத்தமுறச் சொல்லுவாய்.

97. மோகத்தை முனி.

[ப-உ] மோகத்தை - (நிலையில்லாத பொருள்கள் மேல் செல்லும்) ஆசையை,

முனி - நீ கோபித்து விலக்கு.

[க-உ ] நிலையில்லாத பொருள்களின் மேல் செல்லும் ஆசையை நீ வெறுத்துவிடுவாய்.

98. வல்லமை பேசேல்.

[ப-உ ] வல்லமை - உனது) சாமர்த்தியத்தை, பேசேல் - நீ புகழ்ந்து பேசாதே.

[க-உ] உனது சாமர்த்தியத்தைப் புகழ்ந்து நீயே பேசாதே

99. வாதுமுற் கூறேல்

[ப-உ) வாது - வாதுகளை, முற்கூறேல் – (பெரியோர் ) முன்பு பேசாதே

[க-உ] பெரியோர் முன் நின்று வாதாடாதே.

100. வித்தை விரும்பு.

[ப- உ) வித்தை -(ஏதாகிலும்) ஒரு தொழிலை, விரும்பு- இச்சி.

[க-உ] நீ ஏதாகிலும் ஒரு தொழிலை விருப்பி கற்றுக் கொள்ள ஆசைப்படு.

101. வீடு பெறநில்.

[ப-உ) வீடு பெற - மோட்சத்தை யடையும்படி,
நில் - (அதற்குரிய ஞான வழியில் ) நீ நிற்பாய்.
[க-உ) வீடு பெறவேண்டி ஞான மார்க்கத்தில் நிற்பாயாக.

102. உத்தமனாயிரு

(ப-உ ] உத்தமனாய் - உயர் குணமுடையவனாகி, இரு - நீ வாழ்ந்திரு.

[க-உ ] நல்லொழுக்கத்தால் மேம்பட்டவனாய் நீ இருப்பாயாக.

103. ஊருடன் கூடிவாழ்.

[ப-உ ] ஊருடன் - ஊரிலுள்ளவரோடு , கூடி - (நன்மை தீமைகளில்) கலந்து,
வாழ் - நீ வாழ்வாயாக.
[க-உ) ஊராரோடு நன்மை தீமைகளில் கலந்து நீ வாழ்வாயாக.

104. வெட்டெனப் பேசேல்.

[ப-உ] வெட்டென - கத்தி வெட்டுவதைப்போல்,
பேசேல் - ஒருவரிடமும் கண்டிப்பாய் நீ பேசாதே.

[க-உ] யாருடனும் கத்தி வெட்டைப் போலக் கண்டிப்பாக பேசாதே.

105. வேண்டி வினைசெயேல்.

[ப-உ] வேண்டி - விரும்பி, வினை - தீவினையை, செயேல்-செய்யாதே.

[க-உ] தீவினையை நீ விரும்பிச் செய்யாதே.

106. வைகறைத் துயிலெழு

[ப-உ] வைகறை - விடியமற் காலத்தில் , துயில் --- நித்திரையை விட்டு,
எழு -எழுந்திருப்பாய்.

[க-உ] தினந்தோறும் சூரியன் உதிப்பதற்கு முன்பே நீ தூக்கத்தைவிட்டு எழுந்திரு.

107. ஒன்னாரைத் தேறேல்.

[ப-உ] ஒன்னாரை –பகைவரை, தேறேல் - நம்பாதே.

[க-உ ] நீ பகைவரை எப்போதும் நம்பாதே.

'ஒன்னாரைச் சேரேல்' என்றும் பாடம்.

108. ஓரஞ் சொல்லேல்.

[ப-உ ] ஓரம் - பட்சபாதமாக, சொல்லேல் --- (வழக்கில்) நீ பேசாதே.

(க-உ ] நியாய சபையில் நீ நடு நிலைமை யில்லாமல் ஒரு பக்கமாகப் பேசாதே.

**ஆத்தி சூடி மூலமும் விளக்கவுரையும் முற்றிற்று.**

-----------------

## 2. கொன்றை வேந்தன் - மூலமும் விளக்கவுரையும்

கொன்றை வேந்தன் செல்வ னடியினை
என்று மேத்திக் தொழுவோ மேயாமே.

[ப. உ] கொன்றை - கொன்றை மாலையைக் சூடிய, வேந்தன் - தலைவனாகிய சிவபெருமானுக்கு, செல்வன் - செல்வக் குமாரராகிய விநாயகக்கடவுளுடைய , அடியிணை - பாதங்கள் இரண்டையும், யாம்-நாம், என்றும்- எப்போதும் , ஏத்தி - துதித்து, தொழுவோம்- வணங்குவோம்.

[க.உ] யாம் என்றும், விநாயகருடைய பாதங்களைத் துதித்து வணங்குவோம்.

**நூல்**

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

[ப. உ] அன்னையும்-தாயாரும், பிதாவும் - தகப்பனாரும், முன் - முன்னே ,

அறி - அறியப்படும், தெய்வம் - தெய்வங்களாவார்.

[க.உ] தாயும் தந்தையும் முன்பு காணப்பட்ட தெய்வங்களாவார்.

2. ஆலயம் தொழுவது சாலவு நன்று.

[ப. உ] ஆலயம் - கோயிலுக்குச் சென்று, தொழுவது - கடவுளை வணங்குவது,

சாலவும் - மிகவும் , நன்று - நன்மையாம்.

[க.உ] கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மிக்க நல்லது.

3. இல்லற மல்லது நல்லற மன்று.

இல்லறம்- (மனைவியோடு கூடிச் செய்யும்) அறமானது, நல்லறம் - சிறந்த அறமாகும்;

அல்லது - இல்லறமல்லாததாகிய துறவறமானது, அன்று - சிறந்த அறமாகாது.

[க-உ] மனைவியோடு கூடிச் செய்யும் அறமே சிறப்புடையதாகும்.

4. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.

[ப. உ] ஈயார் - கொடுக்காதவருடைய, தேட்டை - சம்பாத்தியத்தை, தீயார் -

கொடியவர், கொள்வர் - அபகரித்துக் கொள்வார்.

[க-உ] கொடுக்காத உலோபிகள் செல்வத்தைக் கள்வர் முதலிய கொடியவர்கள் வலிய அபகரித்துக் கொள்வர்.

ஈக்கள் தேன் கூண்டில் சேமித்து வைத்த தேனைக் கையில் தீப்பந்த முடையவர் கவர்ந்து கொள்ளுதல் கண்கூடு என்பதை இப்பாட்டிற்கு உதாரணமாகப் பொருத்தி அமைத்துள்ளது போற்றுதற்குரியது. இது இரட்டுற மொழிதல் என்னும் உத்தியாகும்.

5. உண்டி சுருங்குதல் * பண்டிக் கழகு

[ப. உ] உண்டி - உணவு, சுருங்குதல் - குறைதல், பண்டிக்கு - வயிற்றுக்கு,

அழகு--அழகாகும்.

[க-உ] மிதமாக உண்பது வயிற்றுக்கு நல்லது.

“உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு " என்றும் பாடம்.

[*] இது திரு. தி. கனகசுந்தரம் பிள்ளை அவர்களுடைய பதிப்பில் கண்ட பாடமாகும்.

6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

[ப. உ] ஊருடன் - ஊராருடன், பகைக்கின் - ஒருவன் விரோதம் கொண்டால், வேருடன் கெடும் - (அவன் தன்) வமிசத்துடன் கெடுவான்.

[க-உ ] ஒருவன் தன் ஊராருடன் பகை கொண்டால் அவன் வமிசத்தோடு அழிந்து விடுவான்.

7. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.

[ப. உ] எண்ணும் - கணக்கும், எழுத்தும் - இலக்கணமும் , கண் எனத்தகும் - (மக்களுக்கு) கண்கள் என்று சொல்லப்படும்.

[க-உ] கணக்கும் இலக்கணமும் மக்களுக்குக் கண்கள் என்று சொல்லத்தகும்.

8. ஏவா மக்கண் மூவா மருந்து.

[ப. உ] ஏவா மக்கள் - (பெற்றோர் இதனைச் செய்வாய் என்று) ஏவுதற்கு முன்பே குறிப்பறிந்து செய்யும் மக்கள், மூவா - சாவாத தன்மையை அளிக்கும், மருந்து - தேவாமிர்தம் போல்வார்.

[க-உ] பெற்றோர்கள் குறிப்பறிந்து நடக்கின்ற பிள்ளைகள் மிகச் சிறந்தவராவார்கள்.

9. ஐயம் புகினும் செய்வன செய்.

[ப. உ] ஐயம் புகினும் - பிச்சை யெடுத்தாலும், செய்வன - செய்யத் தக்கவைகளை, செய் - நீ செய்வாய்.

[க-உ] பிச்சை யெடுத்துப் பிழைத்தாலும் நீ உன் கடமைகளைச் செய்வாயாக.

10. ஒருவனைப் பற்றி யோரகத்திரு.

[ப-உ ] ஒருவனைப் பற்றி - ஒருவனைத் (துணையாகத்) கொண்டு,

ஓரகத்திரு - ஓரிடத்தில் நீ வாசம் செய்வாய்.

[க-உ] தகுதியான ஒருவனைத் துணையாகக் கொண்டு நீ ஒரிடத்தில் வாசஞ் செய்வாய்.

11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்.

[ப. உ] வேதியர்க்கு - பிராமணர்க்கு, ஒழுக்கம் - ஆசாரமானது, ஓதலின் - (வேதம்) ஓதுவதைக் காட்டிலும், நன்றே - நல்லதேயாகும்.

[க-உ] வேதியர்க்கு வேதத்தைக் கற்பதைக் காட்டிலும் ஒழுக்கம் சிறந்ததாகும்.

12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.

[ப. உ] ஔவியம் பேசுதல் - பொறாமைச் சொற்களைப் பேசுதல், ஆக்கத்திற்கு - (ஒருவனுடைய) செல்வத்திற்கு, அழிவு - கேட்டைத் தருவதாகும்.

[க-உ] ஒருவன் பொறாமைச் சொற்களைப் பேசுதல் அவன் செல்வத்திற்கு அழிவைத் தருவதாகும்.

13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு

[ப-உ] அஃகமும் - நெல் முதலிய தானியத்தையும், காசும் - திரவியத்தையும், சிக்கெனத் தேடு - உறுதியாகத் தேடு.

[க-உ] தானியத்தையும் திரவியத்தையும் நீ உறுதியாகத் தேடுவாய்.

14. கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை.

[ப. உ] கற்பு எனப்படுவது - (பெண்களுக்கு) கற்பென்று சொல்லப்படுவது, சொல் - கணவர் சொல்லுக்கு, திறம்பாமை - மாறுபடாமையாகும்.

[க-உ] பெண்களுக்குக் கற்பென்று சொல்லப்படுவது, கணவர் வார்த்தைக்கு மாறாக நடவாமையாகும்.

15. காவல் தானே யாவையர்க் கழகு.

[ப. உ] காவல்தானே - (கற்புக்கு அழிவு வராமல்) காத்துக் பொள்ளுதல், பாவையர்க்கு - பெண்களுக்கு, அழகு - அழகாகும்.

[க-உ] கற்புக்கு அழிவு வராமல் பார்த்துக்கொள்வதே பெண்களுக்கு அழகாகும்.

16. கிட்டா தாயின் வெட்டென மற.

[ப-உ] கிட்டாதாயின் - (விரும்பிய ஒரு பொருள்) கிடைக்காதானால்,
வெட்டென மற - சீக்கிரத்தில் மறந்து விடுவாய்.
[க-உ] விரும்பிய ஒரு பொருள் கிடைக்காவிட்டால், சீக்கிரம் அதனை நீ மறந்து விடுவாய்.

17. கீழோ ராயினும் தாழ வுரை.

[ப. உ] கீழோர் ஆயினும் - தாழ்ந்தவராயினும், தாழ உரை - தாழ்மையாகப் பேசு.

[க-உ] தாழ்ந்தவரிதும் நீ வணக்கமுடன் பேசு.

18. குற்றம் பார்க்கில் சுற்ற மில்லை.

[ப. உ] குற்றம் பார்க்கில் - குற்றங்களை ஆராய்ந்து பார்த்தால்,
சுற்றம் - உறவினர், இல்லை - (ஒருவரும்) இல்லை.
[க-உ] குற்றங்களையே நாம் ஆராய்வோமாயின், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான குற்ற முடையவராகவே காணப்படுவர். ஆகையால், குற்ற மில்லாத சுற்றத்தாரை நாம் பார்ப்பது அரிதாகும் என்பதாம்.

19. கூரம் பாயினும் வீரியம் பேசேல்.

[ப-உ ] கூர் அம்பு ஆயினும் - (உனது கையிலுள்ளது) கூர்மையான அம்பானாலும்,
வீரியம் - வீரத்தன்மையை, பேசேல் – நீ பேசாதே.
[க-உ] உனது கையில் உள்ளது கூர்மையான அம்பாயினும் நீ உன் வீரத்தைப் புகழ்ந்து பேசாதே.

20. கெடுவது செய்யின் விடுவது கருமம்.

[ப. உ] கெடுவது - தீமையை, செய்யின் - (உன் சிநேகன்) செய்வானாயின்,
விடுவது - (அவனது சிநேகத்தை) நீ விட்டு விடுவது, கருமம்- நல்ல செயலாம்.
[க-உ] உன்னுடைய சிநேகிதன் உனக்கொரு தீங்கு செய்வானாயின், அவனது சிநேகத்தை நீவிட்டு விடுவது நல்லதாகும்.

21. கேட்டி லுறுதி கூட்டு முடைமை.

[ப. உ] கேட்டில் - வறுமை காலத்தில், உறுதி - மனம் தளராதிரு,
உடைமை - செல்வத்தை, கூட்டும் - சேர்க்கும்.

[க-உ] வறுமை வந்த போது மனந் தளராமல் இருப்பது ஒருவர்க்குச் செல்வத்தை உண்டாக்கும்.

22. கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி.

[ப. உ] கைப்பொருள் - தன்னின் கையிலிருக்கின்ற செல்வத்தைப் பார்க்கிலும்,
மெய்ப்பொருள் - உண்மையான செல்வமானது, கல்வி - கல்வியே யாகும்.

[க-உ] திரவியத்தை காட்டிலும் கல்வியே உண்மையான பொருளாகும்.

23. கொற்றவ னறித லுற்றிடத் துதவி.

[ப. உ] கொற்றவன் - அரசனை, அறிதல் - (ஒருவன்) அறிந்திருத்தல்,
உற்றிடத்து – (அவனுக்கு ஆபத்து வந்து) பொருந்திய இடத்தில், உதவி - உதவியாகும்.

[க-உ] ஒருவனுக்கு அரசன் அறிமுகமாய் இருப்பது ஆபத்தில் உதவியாகும்.
உற்ற விடத்து என்பது உற்றிடத்து என விகாரப்பட்டது.

24. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.

[ப. உ] கோள் செவி - கோள் கேட்கும் ஒருவனுடைய காதில்,
குறளை - (ஒருவன் சொல்லும்) கோள், காற்றுடன் - காற்றுடன் சேர்ந்த,
நெருப்பு - நெருப்பைப் போல மூளும்.

[க-உ] கோள் கேட்பதற்கு விருப்பமுடையவன் காதில் சொன்ன கோட்சொல் காற்றால் வீசப்பட்ட நெருப்புப் போல அதிகமாக மூளும்.

25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.

[ப. உ] கௌவை - (பிறர் மேல்) நிந்தை சொற்களை, சொல்லின் - ஒருவன் சொன்னால்,
எவ்வருக்கும், - எல்லோருக்கும், பகை - (அவன்) பகையாவான்.

[க-உ] பிறர் பழி தூற்றுகின்றவன் எல்லோருக்கும் பகையாவான். எவருக்கும் என்பது எவ்வருக்கும் என விகாரப் பட்டது.

26. சந்ததிக் கழகு வந்தி செய்யாமை.

[ப. உ] சந்ததிக்கழகு - தனது வமிசத்திற்கழகு, வந்தி செய்யாமை - (ஒருவன் தன் மனைவியை) மலடியாகச் செய்யாமையாகும்.
[க-உ] வமிசத்திற்கு அழகு மக்கட் பேறு உண்டாகுவது. ஒருவன் தன் மனைவியுடன் கூடி வாழ்தல் வேண்டும்.

27. சான்றோர் என்கை யீன்றோர்க் கழகு.

[ப. உ] சான்றோர் என்கை - (தன்னுடைய புத்திரரைக் கல்வியறிவால் நிறைந்தவர் என்று பிறர்) சொல்வது, ஈன்றோர்க்கு - பெற்றவர்களுக்கு, அழகு - அழகாகும்.
[க-உ] தம் புத்திரரை அறிவுடையவர் என்று பிறர் சொல்லக் கேட்பது தாய் தந்தையருக்கு அழகாகும்.

28. சிவத்தைப் பேணில் தவத்திற் கழகு.

[ப. உ] சிவத்தை - சிவனை, பேணின் – (ஒருவன்) வழி பட்டால், தவத்திற்கு - (அவன் செய்யும்) தவத்திற்கு அழகு - அழகாகும்.
[க-உ ] ஒருவன் சிவபெருமானை வழிபடுதல், அவன் தவத்திற்கு அழகாகும்.

29. சீரைத் தேடின் ஏரைத் தேடு.

[ப. உ] சீரை - பெருமையை, தேடின் - தேடினால், ஏரைத்தேடு - ஏர் என்னும் உழுபடையைத் தேடுவாய்.
[க-உ] ஒருவனுக்கு உழுதுண்டு வாழ்வது சிறப்புடையதாகும்.

30. சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்.

[ப. உ] சுற்றத்திற்கு - உறவினருக்கு, அழகு - அழகாவது, சூழ இருத்தல் - சூழும்படி வந்திருத்தல்.
[க-உ] சுற்றத்தார்க் கழகாவது இன்ப துன்ப காலங்களில் சூழ வந்திருப்பதாகும்.

31. சூதும் வாதும் வேதனை செய்யும்.

[ப. உ] சூதும் - சூதாடுதலும், வாதும் - குதர்க்கம் பேசுதலும், வேதனை - துன்பத்தை, செய்யும் - உண்டாக்கும்.

[க-உ] சூதாடுதலும் வீண் தர்க்கம் செய்தலும் துன்பத்தை உண்டாகும்.

32. செய்தவ மறந்தால் கைதவ மாளும்.

[ப. உ] செய்தவம் - செய்யும் தவத்தை , மறந்தால் - (ஒருவன்) மறப்பானாயின்,

கைதவம் - (அவனை) வஞ்சனையாகிய மாயை, ஆளும் - அடிமை கொள்ளும்.

[க-உ] ஒருவன் தவத்தைச் செய்யானாயின் அவனை மாயையானது அடிமை கொள்ளும்.

33. சேமம் புகினும் சாமத் துறங்கு.

[ப. உ] சேமம் புகினும் - காவல் செய்யுமிடத்திற்குச் சென்றாலும்,

சாமத்து - நடு இரவில், உறங்கு - நித்திரை செய்.

[க-உ] நீ காவல் காக்கும் இடத்திலும் நடு இரவில் நித்திரை செய்வாய்.

34. சையொத் திருந்தால் ஐய மிட்டுண்.

[ப. உ] சை - கைப்பொருள், ஒத்திருந்தால் - இசைந்திருந்தால்,

ஐயமிட்டு - பிச்சையிட்டு, உண் - உண்பாய். சை - ஓரெழுத் தொரு மொழி ; பொருள்.

[க-உ ] உன்னிடத்தில் பொருள் இசைந்திருந்தால், நீ பிச்சையிட்டு, உண்பாய்.

35. சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்.

[ப. உ] சொக்கர் என்பவர் - பொன்னுடையவர் என்று சொல்லப் படுபவர், அத்தம்-

(அறமும் இன்பமுமாகிய மற்றைப்) புருடார்த்தங்களை, பெறுவர் - அடைவர்.

[க-உ ] பொருளுடையவர் , அறமும் இன்பமுமாகிய புருடார்த்தங்களைப் பெறுவர்.

36. சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்.

[ப. உ] சோம்பர் என்பவர் - சோம்பலுடையவர்,

தேம்பித் திரிவர் – (வறுமையால் பிறகு) வருந்தித் திரிவர்.

[க-உ] சோம்பேறிகள் பிற்காலத்தில் வறுமையால் வருந்துவர்.

37. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.

[ப. உ] தந்தை - தகப்பனாருடைய, சொல் - சொல்லுக்கு, மிக்க- மேன்மையான, மந்திரம்-பலனைத் தரும் மந்திரமானது, இல்லை - வேறொன்று இல்லை.

[க-உ] தகப்பனார் சொல்லுக்கு மேலான மந்திரமில்லை.

38. தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை.

[ப. உ] தாயின் - தாயாரைப் பார்க்கிலும், சிறந்த - சிறப்பான, ஒரு கோயிலும் - ஒரு கோயிலும், இல்லை - இல்லையாம்.

[க-உ] கடவுளை வணங்குவதைக் காட்டிலும், தாயை வணங்குவது சிறப்புடையதாகும். சிறந்த என்பது சிறந்து என்று விகாரப்பட்டது . தாய் சொல் துறந்தால் வாசகமில்லை' என்றும் பாடம்.

39. திரைகடலோடியுந் திரவியம் தேடு.

[ப. உ] திரைகடல்- அலை வீசுகின்ற கடல் மார்க்கமாய் , ஓடியும் – (தூர பிரதேசம்) சென்றும், திரவியம்- பொருளை, தேடு - சம்பாதி.

[க-உ] நீ கடல் வழியாகப் பல ஊர்கள் சென்றும் பொருளைத் தேடுவாயாக.

40. தீராக் கோபம் போரா முடியும்.

[ப. உ] தீரா - நீங்காத, கோபம் - கோபமானது, போரா- சண்டையாக, முடியும் - முடிந்து விடும்.

[க-உ] தணியாத கோபமானது சண்டையாக முடிந்து விடும்.

41. துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு.

[ப. உ] துடியா – (தன் கணவருக்குத் துன்பம் வந்த போது மனம்) பதைக்காத, பெண்டிர் - பெண்கள், மடியில் - (அக்கணவருடைய) மடியில், நெருப்பு - நெருப்புக்கு ஒப்பாவார்.

[க-உ ] தன் கணவனுக்குத் துன்பம் நேர்ந்தபோது பதை பதைக்காத மனைவி, அவனுக்கு அடிவயிற்றில் கட்டிய நெருப்புப் போல் துன்பம் செய்வாள்.

42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.

[ப. உ] தூற்றும் – (தம் கணவர் மீது குற்றஞ் சொல்லி) தூற்றுகின்ற, பெண்டிர் - பெண்களை , கூற்று எனத்தகும் - (அக்கணவருக்கு) எமன் என்று சொல்லத் தகும்.

[க-உ ] கணவர் மீது அவதாறு பேசும் மனைவி அவருக்கு எமன் என்று சொல்லத்தகும்.

43. தெய்வம் சீறில் கைதவ மாளும்

[ப. உ] தெய்வம் - கடவுள் , சீறின் - (ஒருவனைக்) கோபித்தால், கைதவம் - அவனைத் துன்பமானது, ஆளும் - அடிமை கொள்ளும்.

[க-உ] தெய்வம் கோபிக்குமாயின் துன்ப முண்டாகும்.

44. தேடா தழிக்கின் பாடா முடியும்.

[ப. உ] தேடாது – (ஒருவன் வருந்திச்) சம்பாதியாமல், அழிக்கில்- (உள்ள பொருளை) அழிப்பானே யானால், பாடா முடியும் -(அவனுக்குப் பிறகு) துன்பமாக முடியும்.

[க-உ] பொருளைச் சம்பாதியாமல் முன்னோர் தேடி வைத்த பொருளையே செலவழித்துக் கொண்டிருந்தால் பிற்காலத்தில் அது துன்பமாக முடியும்.

45. தையும் மாசியும் வையகத் துறங்கு.

[ப-உ] தையும் மாசியும் - தை மாதத்திலும் மாசி மாதத்திலும், வை அகத்து - வைக்கோலால் வேய்ந்த கூரை வீட்டில், உறங்கு - நித்திரை செய்.

[க-உ] தை, மாசி மாதங்களில் குளிர் அதிகமாகையால், வைக்கோல் வேய்ந்த கூரை வீட்டில் நீ உறங்குவாயாக.

46. தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது.

[ப. உ] தொழுது - (ஒருவரை) வணங்கி, ஊண் - உண்ணும் உணவினது, சுவையின் - சுவையைப் பார்க்கிலும், உழுது - உழுது பயிர் செய்து, ஊண் - உண்ணும் உணவின் சுவை, இனிது - இன்பம் தருவதாகும்.

[க-உ] சேவகம் செய்து பிழைப்பதைக் காட்டிலும் பயிர் செய்து பிழைப்பதே இன்பமுடையதாகும்.

47. தோழனோடு மேழைமை பேசேல்.

[ப. உ] தோழனோடும் - உன்னுடைய நண்பனோடும்,
ஏழைமை பேசேல் - உனது வறுமையைப் பற்றி பேசாதே.
[க-உ ] உனது வறுமையை உன் நண்பனிடத்திலும் நீ சொல்லாதே.

48. நல்லிணக்க மல்லது அல்லல் படுத்தும்.
[ப. உ] நல்லிணக்கம் அல்லது - நல்ல சேர்க்கை யல்லாதது, அல்லல்- துன்பத்தை, படுத்தும்- உண்டாக்கும்.
[க-உ] கெட்ட சேர்க்கை ஒருவனுக்குத் துன்பத்தைக் தொடுக்கும்.

49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.
[ப. உ] நாடெங்கும் - தேசமெங்கும், வாழ - செழித்து வாழ, கேடொன்றும் -ஒருவித கெடுதியும், இல் -- இல்லையாம்.
[க-உ] தேசமெங்கும் செழித்திருந்தால் ஒருவர்க்கும் ஒரு கெடுதியும் இல்லை.

50. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை.
[ப. உ] நிற்க - (கல்வியானது) நிலைக்க, கற்றல் - படித்தல், சொல் - (தான் சொல்லும்) சொல், திறம்பாமை - தவறாமை.
[க-உ ] நிலைபெறக் கற்றலாவது பயனின்றிக் கழியும் சொற்களைச் சொல்லாமையாகும்.

51. நீரகம் பொருந்திய வூரகத் திரு.
[ப. உ] நீர் - நீர் வளப்பம், அகம் - தன்னிடத்து, பொருந்திய - அமைந்த, ஊரகத்து - ஊரில், இரு - குடியிருப்பாயாக.
[க-உ ] நீர் வளப்பம் பொருந்திய ஊரில் நீ குடியிருப்பாயாக.

52. நுண்ணிய கருமமு மெண்ணித் துணி.
[ப-உ] நுண்ணிய - சிறிய, கருமமும் - காரியத்தையும், எண்ணித் துணி - ஆலோசித்து நீ செய்யத் துணிவாய்.
[க-உ] சிறிய காரியத்தையும் நன்கு ஆலோசனை செய்து, பிறகு அதனைச் செய்யத் துணிவாயாக.

53. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.

[ப-உ ] நூல் முறை - நீதி நூலில் சொல்லப்பட்ட முறையை, தெரிந்து - அறிந்து, சீலத்து - நல்லொழுக்க வழியில், ஒழுகு - நட.

[க-உ] நீதி நூலில் சொல்லப்பட்ட விதிகளை அறிந்து ஒழுக்க வழியில் நடப்பாயாக.

54. நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை.

[ப. உ] நெஞ்சை - மனத்தை, ஒளித்து - மறைத்து, ஒரு வஞ்சகம் - யாதொரு வஞ்சனையும், இல்லை - இல்லையாம்.

[க-உ ] மனத்திற்குத் தெரியாத வஞ்சகமொன்றும் இல்லையாம்

55. நேரா நோன்பு சீராகாது.

[ப. உ] நேரா – (மனம்) ஒவ்வாத, நோன்பு - தவம், சீர் ஆகாது - சீராக முடியாது.

[க-உ ] மனம் பொருந்திச் செய்யாத தவமானது, செம்மையாக முடியாது.

56. நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்.

[ப-உ] நைபவர் எனினும் - துன்பத்தால் வருந்துகின்ற எளியவராயினும், நொய்ய - அற்ப வார்த்தைகளை, உரையேல் - சொல்லாதே.

[க-உ] எளியவராயினும் அற்ப வார்த்தைகளை நீ உரைக்காதே.

57. நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவார்.

[ப-உ] நொய்யவ ரென்பவர் - சிறியவர் என்று இகழப்படுபவர் - வெய்யவராவார் - (அவர் தாம் செய்யும் காரியத்தால்) விரும்பப்படுபவராவார். (வெம்மை - விருப்பம்)

[க-உ] சிறியவரென்று இகழப்படுவோரும் விரும்பும் தன்மைய ராவார்.

58. நோன்பென் பதுவே கொன்று தின்னாமை.

[ப. உ] நோன்பென்பது - விரதம் என்று சொல்லப் படுவது, கொன்று - ஒருயிரைக் கொலை செய்து, தின்னாமை - (அதன் உடம்பை) உண்ணாமையாகும்.

[க-உ] விரதமானது ஒரு உயிரைக் கொன்று அதன் ஊனைத் தின்னாமையாம்.

59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.

[ப. உ] பண்ணிய - ஒருவன் செய்த, பயிரில் -பயிரின் விளைவினாலும், விளைவு இல்லாமையினாலும், புண்ணியம் - அவனிடத்தில் புண்ணியம் உள்ளமையும், இல்லாமையும், தெரியும்- விளங்கும்.

[க-உ ] ஒருவன் செய்த பயிர் விளைவிலிருந்து அவனுடைய புண்ணியத்தை அறியப்படும்.

60. பாலோ டாயினும் காலமறிந் துண்.

[ப-உ] பாலோடு ஆயினும் - பாலுடன் கலந்த அன்னத்தை உண்ணுவதானாலும், காலமறிந்து - உண்ணும் காலத்தை அறிந்து, உண் - நீ புசிப்பாய்.

[க-உ ] பாலன்ன மாயினும் உண்ணும் காலமறிந்து உண்ணல் வேண்டும.

61. பிறன்மனை புகாமை அறமெனத் தகும்.

[ப. உ] பிறன்மனை - பிறருடைய மனைவியை (விரும்பி), புகாமை - செல்லாமை, அறம் எனத் தகும் - தருமம் என்று சொல்லத் தகும்.

[க-உ] பிறன் மனைவியை விரும்பாமை சிறந்த தருமமாகும்.

62. பீரம் பேணி பாரந் தாங்கும்.

[ப. உ] பீரம் பேணி- தாய்ப்பால் உண்டு வளர்ந்தவன், பாரம் - பாரமான சுமையை, தாங்கும்- சுமப்பான்.

[க-உ ] தாய்ப்பாலை நன்றாகக் குடித்து வளர்ந்தவன் தேக வன்மை யுடையவனாவான்.
பீர்- தாய்ப்பால், அம் - சாரியை.

63. புலையும் கொலையும் களவும் தவிர்.

[ப. உ] புலையும் - மாமிசம் உண்ணுதலையும், கொலை - ஓர் உயிரைக் கொல்லுதலையும், களவும் - பிறர் பொருளைத் திருடுதலையும், தவிர் - ஒழித்து விடுவாய்.

[க-உ] நீ புலால் உண்ணுதலையும், கொலை செய்தலையும், திருடுதலையும் செய்யாதே.

64. பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம்.

[ப. உ] பூரியோர்க்கு- கீழ்மக்களுக்கு, சீரிய-சிறந்த, ஒழுக்கம் - ஆசாரமானது, இல்லை - இல்லையாம்.

[க-உ] கீழ் மக்களிடத்தில் சிறந்த ஆசாரமானது கிடையாது.

65. பெற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்.

[ப-உ] பெற்றோர்க்கு – (மெய்ஞ்ஞானத்தைப்) பெற்றவர்க்கு, சுற்றமும் - உறவினர்மேல் ஆசையும், சினமும் - மற்றவர்மேல் வெறுப்பும், இல்லை - இல்லையாம்.

[க-உ] மெய்ஞ்ஞானம் பெற்றவர்க்கு சுற்றமும் கோபமும் இல்லை.

66. பேதமை யென்பது மாதர்க் கணிகலம்.

[ப-உ ] பேதமை என்பது - அறியாமை என்று சொல்லப் படுவது,

மாதர்க்கு - பெண்களுக்கு, அணிகலம் - ஆபரணமாகும்.

[க-உ] அறிந்திருந்தும் அறியாதவர் போல் நடிக்கும் குணம் பெண்களுக்கு ஆபரணமாகும். ஆபரணம் பெண்களுக்கு அழகு செய்வது போல் இக்குணமும் அவர்களுக்கு அழகு செய்வதாகும். ஆபரணம் வேண்டிய போது அணிந்து கொள்ளப்படுவது போல இக்குணமும் அவர்கள் வேண்டிய போது அணியப் படுவதாகும் என்பது அறியத் தக்கது.

67. பையச் சென்றால் வையந் தாங்கும்.

[ப. உ] பைய - மெல்ல, சென்றால் - (ஒருவன் தக்க வழியிலே) நடந்தால்,

வையம் - பூமியிலுள்ளோர், தாங்கும் - (அவனை) மேலாகக் கொள்வர்.

[க-உ ] ஒருவன் தகுதியான வழியில் அமைதியாக நடந்தால் உலகத்தார் அவனை மேலாகக் கொள்வர்.

68. பொல்லாங் கென்பவை யெல்லாம் தவிர்.

[ப-உ] பொல்லாங்கு என்பவை - தீங்குகள் என்று சொல்லப் பட்டவை,

எல்லாம்- யாவற்றையும், தவிர்- நீ நீக்கி விடுவாய்.

[க-உ ] தீங்குகள் என்று சொல்லப்பட்டவை யாவற்றையும் நீ செய்யாதே.

69. போனகம் என்பது தானுழந் துண்டல்.

[ப-உ] போனகம் என்பது - உணவென்று சொல்லப் படுவது, தானுழந்து - தான் வருந்தி, உண்டல்-உண்ணுவதாகும்.
[க-உ ] உணவென்று சிறப்பாகச் சொல்லப்படுவது, ஒருவன் வருந்திச் சம்பாதித்ததை உண்பதாம்.

70. மருந்தே யாயினும் விருந்தோ டுண்.

[ப-உ ] மருந்தேயாயினும் - (உண்ணப்படுவது) கிடைத்தற்கரிய தேவாமிர்தமே யானாலும், விருந்தோடு - விருந்தாளிகளுடன், உண் - நீ புசிப்பாய்.

[க-உ] கிடைத்தற்கரிய தேவாமிர்த மானாலும் விருந்தினருடனே உண்பாயாக.

71. மாரி யல்லது காரிய மில்லை.

[ப. உ] மாரி யல்லது - மழையினால் அல்லாமல், காரியம் இல்லை - யாதொரு காரியமும் இல்லை.
[க-உ] மழை இல்லாவிட்டால் உலகில் எக்காரியமும் நடை பெறாது.

72. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை

[ப. உ] மின்னுக்கெல்லாம் - மின்னலுக்கெல்லாம், பின்னுக்கு மழை -பின்னால் மழை பெய்யும்.
[க-உ ] மின்னுவதைப் பார்த்துப் பின்னுக்கு நல்ல மழை இருக்கின்றது என்பதை நீ அறிந்து கொள்க.

73. மீகாமனில்லா மரக்கல மோடாது.

[ப. உ] மீகாமன் - மாலுமி, இல்லா - இல்லாத, மரக்கலம் - கப்பல், ஓடாது - கடலில் செவ்வையாக ஓடாது.
[க-உ ] மாலுமி யில்லாத கப்பல் ஓடாதது போலத் தலைவனில்லாத குடும்பமும் வேந்தனில்லாத நாடும் செம்மையாக நடவா.

74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

[ப. உ] முற்பகல்- ஒரு பகலின் முன் பங்கில், செய்யின் - பிறனுக்குத் தீங்கு ஒருவன் செய்தால், பிற்பகல் - அதன் பின் பங்கிலே, விளையும் (செய்தவனுக்கு) அத்தீங்கு தானே உண்டாகும்.

[க-உ] ஒரு பகலின் முற்பாகத்தில் பிறருக்குத் தீங்கு செய்தால், அத்தீங்கு அப்பகலின் பிற்பாகத்தில் தனக்குண்டாகும்.

முற்பகல் பிற்பகல் என்றது விரைவு பற்றி யென்க. இது நன்மை தீமை இரண்டுக்கும் பொதுவாக சொன்னதாகும்.

75. மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்.

[ப. உ] மூத்தோர் – (கல்வியறிவினால்)பெரியோர், சொன்ன - சொல்லிய, வார்த்தை - சிறந்த வார்த்தையானது, அமிர்தம் - தேவாமிர்தத்தைப் போன்றதாகும்.

[க-உ ] பெரியோர் வார்த்தை தேவாமிர்தம் போன்று மிக்க நன்மையைச் செய்யுமாகையால், அது மிகவும் சிறந்ததாகும்.

76. மெத்தையில் படுத்தல் நித்திரைக் கழகு.

[ப-உ] மெத்தையில் - பஞ்சணையில், படுத்தல் - படுத்தலானது நித்திரைக்கு - (ஒருவன் செய்கின்ற) நித்திரைக்கு, அழகு - அழகாகும்.

[க-உ] மென்மையான பஞ்சணையில் படுத்தல் நித்திரைக்கு அழகாகும்.

77. மேழிச் செல்வம் கோழை படாது.

[ப-உ ] மேழி - கலப்பை கொண்டு உழுது பயிர் செய்வதால் உண்டாகின்ற, செல்வம் - செல்வமானது, கோழை படாது - குறையாது

[க--] உழுது பயிர் செய்வதால் உண்டாகும் செல்வம் குறைபடாது.

78. மைவிழி யார்தம் மனையகன் றொழுகு.

[ப. உ] மைவிழியார்தம்- மை பூசிய கண்களுடைய வேசிகளின், மனை - வீட்டினை, அகன்று ஒழுகு - விலகி நடப்பாய்.

[க-உ ] வேசிகளின் வீட்டிற்குச் செல்லாதே.

79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.

[ப-உ] மொழிவது - (பெரியோர்) சொல்வதை, மறுக்கின் - கேளாமல் செய்தால், கருமம் - (ஒருவன் செய்யும்) தொழில், அழிவது - கெடுவதாகும்.

[க-உ ] ஒருவன் பெரியோர் சொல்லை மீறி நடந்தால், அவன் செய்யும் தொழில் பயன்படாது அழியும்.

80. மோன மென்பது ஞான வரம்பு.

[ப-உ ] மோனம் என்பது - மௌன நிலை என்று சொல்லப் படுவது, ஞான வரம்பு - மெய்ஞ்ஞானத்துக்கு எல்லையாகும்.

[க-உ] மௌனம் என்பது ஞானத்தின் எல்லையாகும்.

81. வளவ னாயினு மளவறிந் தழித்துண்.

[ப-உ ] வளவன் ஆயினும் – (செல்வத்தில் நீ) சோழனுக்குச் சமானமானவன் ஆனாலும், அளவு – (வருவாயின்) அளவினை, அறிந்து - தெரிந்து, அழித்து - செலவழித்து, உண் - சாப்பிடுவாய்.

[க-உ] நீ எவ்வளவு பெரிய செல்வந்தனாயினும் வரவுக்குத் தக்கபடி செலவு செய்து வாழ்வாயாக.

82. வானம் சுருங்கில் தானம் சுருங்கும்.

[ப-உ] வானம் - மழையானது, சுருங்கின் - குறையுமாயின், தானம் - தருமமானது, சுருங்கும் - குறையும்.

[க-உ] மழையில்லாவிட்டால் உலகில் எவரும் தானம் செய்யார்.

83. விருந்திலோர்க் கில்லை பொருந்திய ஒழுக்கம்.

[ப-உ] விருந்து இலோர்க்கு - விருந்திடாதவர்க்கு, பொருந்திய - தகுதியான, ஒழுக்கம் - இல்லற ஒழுக்கம், இல்லை - இல்லையாம்.

[க-உ ] விருந்திடாதவர்க்கு இல்லறம் இல்லையாகும்.

84. வீரன் கேண்மை கூரம் பாகும்.

[ப. உ] வீரன் - வீரனுடைய, கேண்மை - சிநேகம், கூர் - கூர்மையான, அம்பாகும் - அம்பை ஒக்கும்.

[க-உ] வீரனுடைய நட்பு ஒருவனுக்குப் பகையை வெல்ல உதவும் கூர்மையான அம்பு போல்வதாகும்.

85. உரவோ ரென்கை இரவா திருத்தல்.

[ப-உ] உரவோர் என் கை - வல்லவரென்று சொல்லப்படுதல், இரவாது - யாசியாமல், இருத்தல் - இருக்கையாகும்.

[க-உ] வன்மையுடையவர் என்று சொல்லப்படுவது, யாதொன்றையும் பிறரிடம் யாசியாம லிருத்தலாம்.

86. ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு.

[ப. உ] ஊக்க முடைமை - (ஒரு காரியம் செய்வதில்) மன எழுச்சி உடைத்தாதல், ஆக்கத்திற்கு - செல்வத்திற்கு, அழகு - அழகாகும்.

[க-உ ] மனவெழுச்சி யுடையவனாய் இருத்தல் ஒருவன் தன் ஆக்கத்திற் கழகாகும்.

87. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை.

[ப-உ] வெள்ளைக்கு - குற்ற மில்லாத பரிசுத்த குணமுடையவனிடத்து, கள்ளச் சிந்தை - வஞ்சனை பொருந்திய நினைப்பு , இல்லை - இல்லையாம்.

[க-உ] குற்றமற்ற மனமுடையவனிடத்தில் வஞ்சகமான எண்ணம் இல்லையாகும்.

88. வேந்தன் சீறின் ஆந்துணை யில்லை.

[ப-உ] வேந்தன் - அரசன், சீறின் - ஒருவனைக் கோபிப்பானே யானால், ஆம் - (அப்போது அவனுக்கு) உதவுகின்ற, துணை- சகாயம், இல்லை - இல்லையாம்.

[க-உ ] அரசன் ஒருவனைக் கோபித்தால், அவனுக்கு வேறு துணையில்லை .

89. வையந் தோறும் தெய்வந் தொழு.

[ப. உ] வையம் தோறும் - உலகிலுள்ள தலங்கள் தோறும், தெய்வம் - கடவுளை, தொழு - வணங்குவாய்.

[க-உ] உலகிலுள்ள தலங்கள் தோறும் சென்று நீ கடவுளை வணங்கு.

90. ஒத்த விடத்து நித்திரை கொள்.

[ப-உ ] ஒத்த இடத்து - மனம் சம்மதித்த இடத்தில், நித்திரைகொள் - நித்திரை பண்ணு.

[க-உ] மனம் விரும்பிய இடத்தில் நீ நித்திரை செய்.

91. ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்.

[ப. உ] ஓதாதார்க்கு - நூல்களைக் கல்லாதவர்க்கு, உணர்வொடு - அறிவுடனே, ஒழுக்கம் - நல்ல நடக்கையும், இல்லை - இல்லையாம்.

[க-உ] நல்ல நூல்களைக் கல்லாதவர்க்கு அறிவும் ஒழுக்கமும் இல்லையாகும்.

**கொன்றை வேந்தன் மூலமும் விளக்கவுரையும் முற்றிற்று**

----------------

## 3. ஔவையார் அருளிச்செய்த நல்வழி.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களால்
திருத்தப்பட்ட உரையுடன் அவர்கள் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்
தருமபரிபாலகர் பொன்னம்பலபிள்ளையால் சென்னபட்டணம்
வித்தியானுபாலனயந்திரசாலையில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.
நான்காம் பதிப்பு பிங்கள ௵ மார்கழி ௴. 1918

----

**காப்பு.**

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் -- கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

இதன்பொருள்: கோலம் செய் தங்கக் கரிமுகத்துத் தூமணியே - அழகு செய்கின்ற உயர்வாகிய யானை முகத்தையுடைய பரிசுத்தமாகிய இரத்தினம் போலும் விநாயகக்கடவுளே,-- நான் உனக்குப் பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து தருவேன் --அடியேன் உமக்குப் பாலும் தெளிந்ததேனும் வெல்லப்பாகும் பருப்புமாகிய இந்நான்கையுங் கலந்து நிவேதிப்பேன்; -- நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா - நீர் அடியேனுக்குச் சங்கத்தில் வளர்க்கப்பட்ட - (இயற்றமிழ் இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும்) தமிழ் மூன்றையுந் தந்தருளும். என்றவாறு.

இதனது தாற்பரியம். விநாயகக் கடவுளுக்குப் பூசை செய்யின் முத்தமிழ்ப் புலமையும் உண்டாகும் என்பதாம்.

-----

**நூல்**

புண்ணியமாம் பாவம் போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்-- எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல். 1

இ-ள்: புண்ணியம் ஆம் - புண்ணியமே செய்யத்தக்கது;-- பாவம் போம் - பாவமே ஒழியத்தக்கது. --போன நாள் செய்த அவை - முற்பிறப்பிற்செய்த அந்தப் புண்ணிய பாவங்களே -- மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - பூமியிலே பிறந்த மனிதர்களுக்கு (இப்பிறப்பில் இன்பத்துன்பங்களை அனுபவித்தற்குக் காரணமாக) வைத்த பொருளாகும். -- எண்ணுங்கால் எச்சமயத்தோர் சொல்லும் ஈது ஒழிய வேறு இல்லை - ஆராயுமிடத்து எந்தச் சமயத்தார் சொல்வதும் இந்தப்பொருளே யல்லாமல் மற்றொன்றுமில்லை, --தீது ஒழிய நன்மை செயல் - (ஆதலினாலே) பாவம் நீங்கப் புண்ணியத்தைச் செய்க . எ - று.

இ-ம்: இன்பத்துக்குக் காரணம் புண்ணியமும் துன்பத்துக்குக் காரணம் பாவமுமாதலிற் பாவத்தை ஒழித்துப் புண்ணியத்தைச் செய்க. எ-ம்.

------------

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் -- மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

இ – ள்: சாற்றுங்கால் மேதினியில் சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை -- சொல்லுமிடத்துப் பூமியிலே (உயர்வாகிய சாதி யென்றும் இழிவாகிய சாதியென்றும்) சாதி இரண்டேயல்லாமல் வேறில்லை. - (அவ்விரண்டு சாதியாரும் யாவரெனின்) -- நீதி வழுவா நெறி முறையின் இட்டார் பெரியோர் - நீதி தவறாத நல்வழியிலே நின்று கொண்டு முறைமையோடு (சற்பாத்திரங்களாய் உள்ளவருக்குக்) கொடுத்தவரே

உயர்வாகிய சாதியார் ; -- இடாதார் இழிகுலத்தோர் - கொடாதவரே இழிவாகிய சாதி யார். - பட்டாங்கில் உள்ளபடி - உண்மை நூலின் உள்ள கிரமம் (இதுவேயாம்.) எ - று.

இ – ம்: சற்பாத்திரத்துக்குக் கொடுத்தவரே உயர்வாகிய சாதியார், கொடாதவரே இழிவாகிய சாதியார். எ-ம்.

-----------

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்யென் றிராதே - இடுங்கடுக
உண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு 3

இ – ள்: இயல் உடம்பு இது- திரிகின்ற இந்த உடம்பானது -- இடும்பைக்கு இடும்பை அன்றே - பல துன்பங்காளாகிய சரக்குகளுக்கு நிறைத்து வைக்கும் பையன்றோ -- இடும் பொய்யை மெய் என்று இராதே -- (போசனத்தை) இடுகின்ற நிலையில்லாததாகிய இந்த உடம்பை நிலையுடையதென்று நம்பி இராமல், --கடுக இடும் - சீக்கிரம் (சற்பாத்திரங்களாய் உள்ளவர்களுக்குக்) கொடுங்கள் -- உண்டாயின் - (இத்தருமம் உங்களிடத்து உண்டாயின், -- பெரு வலிநோய் விண்டாரைக் கொண்டாடும் வீடு - பெரிய வலிமையையுடைய மலநோய் நீங்கியவரை மெச்சிக்கொள்கின்ற முத்தியானது ஊழின் உண்டாகும் முறையினாலே (உங்களுக்குக்) கிடைக்கும். எ - று . ஏ அசை.

இ-ம் : நிலையில்லாத உடம்பு உள்ள பொழுதே சற்பாத்திரத்திலே தானஞ்செய்தவருக்கு, அந்தத் தருமத்தினாலே சற்குருவினது திருவருளும், அந்தத் திருவருளினாலே ஞானமும், அந்த ஞானத்தினாலே முத்தியும் சித்திக்கும். எ-ம்.

--------------

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லாற் - கண்ணில்லான்
மாங்காய் விழவெழிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு. 4

இ-ள்: யார்க்கும் - யாவருக்காயினும், -- புண்ணியம் வந்து எய்தும் போது அல்லால் - (முன் செய்த) புண்ணியம் வந்து கூடிய போதல்லாமல், -- எண்ணி ஒரு கருமம்

செய்யொண்ணாது - (மற்றைக்காலத்திலே) நினைத்து ஒரு தொழிலைச் செய்ய முடியாது. -- கண் இல்லான் மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோல் ஒக்கும் - (புண்ணியம் வந்து கூடாத அக்காலத்திற செய்யும் அத்தொழிலானது) கண்ணில்லாதவன் மாங்காய் விழுதற்கு எறிந்த மாத்திரைக் கோலைப் போலும், -- ஆம் காலம் அவர்க்கு ஆகும் - (புண்ணியம் வந்து ) கூடியபோது அவருக்கு (அத்தொழில் தானே) முடியும். எ - று . ஏ அசை.

இ-ம்: புண்ணியமில்லாதவன் எண்ணிய தொழிலும் முடியப்பெறாது கைப்பொருளும் இழப்பான். எ-ம்.

--------------

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா - இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில், 5

இ-ள்: வாராத வருந்தி அழைத்தாலும் வாரா - (தமக்கு) வாராதவைகள், வருந்தி அழைத்தாலும் வாராவாம். -- பொருந்துவன போமின் என்றால் போகா - (தமக்கு) வருபவைகள், --போமின் என்று வெறுத்தாலும் போகாவாம்.-- இருந்து ஏங்கி - (இவ்வுண்மையை அறியாமல்) இருந்துகொண்டு ஏக்க முற்று - நெஞ்சம் புண் ஆகத் தாம் நெடும் தூரம் நினைந்து துஞ்சுவதே - மனம் புண்ணாகும்படி (அவைகளைத்) தாங்கள் நெடுந்தூரம் நினைந்து மாண்டுபோவதே-- மாந்தர் தொழில் - மனிதருடைய தொழிலாகும். எ - று.

இ-ம்: இருவினைகளைச் செய்தவர் அவற்றின் பயன்களாகிய இன்பத்துன்பங்களை அனுபவிப்பது தப்பாதாதலின், அவற்றின் பொருட்டுக் கவலையுற்று வாழ்நாளை வீணாட்போக்குதல் அறியாமை. எ-ம்.

-------------

உள்ளதொழிய வொருவர்க் கொருவர்சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழு முயிர்க்கு. 6

இ - ள் . ஒருவர்க்கு உள்ளது ஒழிய - ஒருவருக்கு (ஊழினால்) உள்ளதல்லாமல், -- ஒருவர் சுகம் கொள்ளக் கிடையா - மற்றொருவருடைய சுகங்களை அனுபவிக்க

விரும்பினால் அவை கிடையாவாம் : -- (ஆதலினால் ) -- குவலயத்தில் - இப்பூமியிலே - --உடலோடு வாழும் உயிர்க்கு - உடம்புகளோடு கூடிவாழும் உயிர்களுக்கு , -- வெள்ளக்கடல் ஓடி மீண்டு கரை ஏறினால் என - வெள்ள நீரையுடைய சமுத்திரத்திலே (கப்பலின் மேற்) சென்று (சம்பாதித்துக்கொண்டு) திரும்பிவந்து கரையேறினாலும் அதனாற் பயன் யாது . எ - று.

இ-ம்: பெருமுயற்சி செய்து பெரும்பொருள் சம்பாதித்தாலும், ஊழினளவன்றி அதிகமாக அனுபவித்தல் கூடாது. எ-ம்.

--------------

எல்லாப் படியாலு மெண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பா ராதலினா லாங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. 7

இ – ள்: எல்லாப் படியாலும் எண்ணினால் - சகலவிதங்களினாலும் ஆராயுமிடத்து, -- இவ்வுடம்பு பொல்லாப் புழுமலி நோய்ப் புல் குரம்பை - இந்தச் சரீரம் பொல்லாத புழுக்களுக்கும் நிறைந்த வியாதிகளுக்கும் புல்லிய ஒரு சிறுவீடாக இருக்கின்றது. -- நல்லார் அறிந்து இருப்பார் - நல்லறிவினோர்கள் (இவ்வுடம்பினிழிவை) அறிந்திருப்பார்கள் -- ஆதலினால் கமல நீர்போல் பிரிந்து இருப்பார் - ஆகையால் அவர்கள் தாமரை யிலையில் நீர்போல (இவ்வுடம்பிலே கூடியிருந்தும் ) கூடாதிருப்பார்கள், -- பிறர்க்குப் பேசார் - (பயன்படாமையால்) பிறருக்கு (அந்த நிலையைச் சொல்லார்கள் . எ - று . ஆம் அசை

இ-ம்: உடம்பு வேறு தாம் வேறு என்று அறிந்த ஞானிகள் உடம்போடு கூடியிருப்பினும் பற்றற்றிருப்பர்கள்; ஆதலால் அவர்களுக்குத் துன்பமே இல்லை. எ-ம்.

--------------

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாந் - தேட்ட
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம். 8

இ – ள்: மகிதலத்தீர் கேண்மின் - பூமியிலுள்ள மனிதர்களே, கேளுங்கள் -- ஈட்டும் பொருள் - தேடுதற்குரிய பொருள்களானவை, -- முயற்சி எண் இறந்த ஆயினும் -

முயற்சிகள் அளவில்லாதன வாயிலும், --ஊழ் கூட்டும் படி அன்றிக் கூடாவாம் - ஊழ் கூட்டுமளவினல்லாமற் சேராவாம். -- தனம் தரியாது - (ஊழினாலே சேரினும்) அப்பொருள் நிலைபெறாது. -- தேட்டம் மரியாதை - (ஆதலினால்) நீங்கள் தேடத்தகுவது மரியாதையேயாம். எ - று. மரியாதை - நன்னெறியினிற்றல். ஆம் அசை . காணுமிரண்டும் முன்னிலையசை.

இ – ம்: பொருள் ஊழினளவன்றி வாராமையானும், வந்த பொருளும் நிலைபெறாமையானும் , நிலைபெறுவதாகிய நல்லொழுக்கத்தையே தேடல் வேண்டும். எ-ம்.

-------------

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 9

இ-ள்: ஆற்றுப் பெருக்கு அற்று - ஆற்றில் வெள்ளம் வற்றிப்போய் -- அடி சுடும் அந்நாளும் - (மணலானது வெய்யிலினாலே காய்ந்து நடப்பவருடைய) அடியைச் சுடுகின்ற அக் காலத்திலும் , -- அவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் - அந்த ஆறானது ஊற்று நீர்ப் பெருக்கினால் உலகத்தாரை உண்பிக்கும் – (அதுபோல்) -- நல்ல குடிப் பிறந்தார் - நல்ல குடியிலே பிறந்தவர் -- நல்கூர்ந்தார் ஆனாலும் - வறுமை அடைந்த காலத்திலும் , -- ஏற்றவர்க்கு இசைந்து இல்லையென மாட்டார் - இரந்தவருக்குக் (கருத்து) இசைந்து இல்லையென்று சொல்லமாட்டாது கொடுப்பார் . எ - று.

இ-ம் : உயர்ந்த குடியிற் பிறந்தவர் வறுமைக்காலத்திலும் இரந்தவருக்குக் கொடாது விடார். எ-ம்.

------------

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்-- வேண்டா
நமக்கு மது வழியே நாம் போமளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும் . 10

இ - ள் : மா நிலத்தீர் - பெரிய பூமியிலுள்ள மனிதர்களே -- ஆண்டு ஆண்டு தோறும் அழுது புரண்டாலும் - (இறந்த) அவ்விடத்தில் வருடந்தோறும் அழுது புரண்டாலும், -- மாண்டார் வருவரோ - இறந்தவர் திரும்பி வருவாரோ (வர மாட்டார்:) -- வேண்டா - (ஆதலினால் அழ ) வேண்டுவதில்லை --நமக்கும் அது வழியே நாம் போம் அளவும் எமக்கு என் என்று நமக்கும் --அம்மரணமே வழியாகும் நாம் இறந்து போமளவும் எமக்கு யாது சம்பந்தம் என்று , -- இட்டு உண்டு இரும் - பிசைஷயிட்டு (நீங்களும்) உண்டு (கவலையற்று) இருங்கள் . எ - று.

இ-ம்: இறந்தவர் பொருட்டு அழுகையினால் உடம்பிற்குத் தளர்ச்சியும் உயிருக்கு வருத்தமும் உண்டாமேயன்றிச் சிறிதும் பயனில்லாமையால், கவலையையொழித்துச் சற்பாத்திரத்துக்குக் கொடுத்து வாழ்க. எ-ம்.

-------------

ஒருநா ளுணவையொழி யென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய் -- ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. 11

இ – ள்: இடும்பை கூர் என் வயிறே - துன்பம் மிகுகின்ற என்னுடைய வயிறே, -- ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய் - (கிடையாதபோது) ஒருநாளுக்குப் போசனத்தை விட்டிரு என்றால் விட்டிராய். -- இருநாளுக்கு ஏல் என்றால் ஏலாய் – (கிடைத்தபோது) இரண்டு நாளுக்கு (உண்ணும் போசனத்தை ஒருங்கு) ஏற்றுக் கொள்ளென்றால் ஏற்றுக்கொள்ளாய். -- ஒரு நாளும் என் நோ அறியாய் - ஒருநாளிலாயினும் என்னுடைய வருத்தத்தை அறியாய். -- உன்னோடு வாழ்தல் அரிது - (ஆதலினால்) உன்னோடு கூடி வாழ்தல் (எனக்கு) அருமையாக இருக்கின்றது . எ - று.

இ-ம்: வயிற்றுக்குத் திருப்தி செய்தலினும் அரியது பிரிதில்லை . எ-ம்.

--------------

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே -- ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு 12

இ - ள் : ஆறு அம் கரையில் மரமும் - ஆற்றினது கரையில் இருக்கின்ற மரமும் -- அரசு அறிய வீற்று இருந்த வாழ்வும் விழும் அன்றே - அரசன் அறிய (அதிகாரஞ்செய்து சம்பாதித்துப்) பெருமையாக வாழ்கின்ற வாழ்க்கையும் அழிந்து போமன்றோ -- உழுது உண்டு வாழ்வு ஏற்றம் - (ஆதலினால்) உழுது பயிர்செய்து உண்டு வாழ்வதே உயர்வாகும்; -- அதற்கு ஒப்பு இல்லை - அதற்குச் சமானம் இல்லை, -- வேறு ஓர் பணிக்குப் பழுது உண்டு - மற்றைத் தொழில் வாழ்க்கைகளுக் கெல்லாம் அழிவு உண்டு. எ - று, அம் காரியை. கண்டீர் முன்னிலையசை.

இ-ம்: பிறர்வயத்தினராகாது தம்வயத்தினராய் நின்று செய்யும் வேளாண்மையாலாகிய வாழ்க்கைக்கு அழிவு இல்லா மையால், அதுவே சிறந்தது. எ-ம்.

------------------

ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர் - ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல் 13

இ - ள் : அம் புவியதன் மேல் - அழகிய பூமியின் மேலே -- ஆவாரை அழிப்பார் யார் - (நல்வினையினால் நெடுங் காலம் உயிர் வாழ்தற்கு உரியவரை (இடையிலே ) அழிக்கவல்லவர் யாவர்? -- அது அன்றிச் சாவாரைத் தவிர்ப்பவர் யார் - அது வல்லாமலும் (தீவினையினால்) இறத்தற்கு உரியவரை நிறுத்தவல்லவர் யாவர்? - ஓவாமல் ஐயம் புகுவாரை விலக்குவார் யார் - (செல்வம் இழந்து) ஒழியாமல் பிசைஷக்குச் செல்வோரைத் தடுக்கவல்லவர் யாவர்? - மெய் - (இது) சத்தியமேயாம் . எ - று. ஏ மூன்றும் அசை.

இ-ம்: ஊழினால் அடைதற்பாலனவாகிய ஆக்கக் கேடுகளைத் தவிர்க்க வல்லவர் ஒருவரும் இல்லை. எ-ம்.

-------------

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை -- சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும். 14

இ –ள்: பேசுங்கால் - (ஆராய்ந்து) சொல்லுமிட த்து ; -- பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை - பிசைஷ எடுத்து உண்டலினும் (இழிவிற் ) பெரிய குடிவாழ்க்கையாவது - பல இச்சை சொல்லி இடித்து உண்கை - பலவாகிய இச்சைகளைப் பேசி (ஒருவரை) நெருக்கி வாங்கி உண்ணுதலாம் -- சிச்சீ - சீசி (இது என்ன செய்கை.) -- வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது - வயிற்றை வளர்த்தற்பொருட்டு மானங்கெடாமல், --உயிர் விடு கை சால உறும் - உயிரை விடுதலே மிக (உயர்ச்சியைப்) பொருந்தும். எ - று.

இ-ம் பிறரிடத்தே இச்சை பேசி வாங்கி உண்டு மானம் இழந்து உயிர்வாழ்தலினும் உயிரை விட்டு மானத்தை நிறுத்துதலே உயர்வுடைத்து. எ-ம்.

------------

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளுமில்லை-- உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். 15

இ - ள். சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு- சிவாயநமவென்று தியானித்துக்கொண்டிருப்பவருக்கு-- ஒருநாளும் அபாயம் இல்லை - ஒருநாளாயினும் இடுக்கண் உண்டாகாது -- இதுவே உபாயம் - (விதியை வெல்லுதற்கு) இதுவே உபாயமாகும்:-- (இதுவே) மதி ஆகும் - (ஆதலின்) இதுவே (உண்மையாகிய) அறிவாகும். -- அல்லாத எல்லாம் மதி விதியே ஆய்விடும் - (இச்சிவத்தியானம்) அல்லாத மற்றையிடங்களி னெல்லாம் புத்தியானது விதியின் வசத்ததேயாகிவிடும். எ - று. இதுவே என்பது பின்னுங் கூட்டப்பட்டது.

இ-ம் . சிவத்தியான முடையவருக்கு விதி இல்லை; சிவத் தியானமில்லாதவருக்கு விதி உண்டு. எ-ம்.

இடையறாத சிவத்தியான முடையவர் அச்சிவத்தையேயன்றிப் பிறிதொன்றையும் அறியாராதலின், அவர் சரீரம் முகந்து கொண்ட சுகதுக்கமென்னும் பிராரத்தகருமம் அவருக்குப் புசிப்பாகாமல், அவருடற் புசிப்பாய் ஒழியும் என்பதே அவருக்கு விதியில்லை யென்பதற்குக் கருத்து. அது திருநாவுக்கரசு நாயனார் முதலிய மெய்ஞ்ஞானிகள் சரித்திரங்களாலும் அறிக.

------------

தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்
கண்ணீர்மை மாறாக் கருணையாற் -- பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்

அற்புதமா மென்றே அறி. 16

இ - ள். தண்ணீர் நில நலத்தால் - தண்ணீரானது நிலத்தினது நன்மையினாலும் , -- தக்கோர் குணம் கொடையால் - நல்லோருடைய குணமானது கொடையினாலும் , -- கண் நீர்மை மாறாக் கருணையால் - கண்களுடைய குணமானது நீங்காத அருளினாலும், -- பெண் நீர்மை கற்பு அழியா ஆற்றால் - பெண்களுடைய குணமானது கற்புநிலை கெடாத வழியினாலும், -- கடல் சூழ்ந்த வையகத்துள் அற்புதம் ஆம் என்றே அறி - சமுத்திரஞ் சூழ்ந்த பூமியினிடத்து (எல்லாரும் ) ஆச்சரியப்படத்தக்கவைகளாகும் என்று நீ அறிவாயாக. எ - று.
இ-ம்: நிலநன்மையினாலே தண்ணீருக்கும், கொடையினாலே நல்லோருக்கும், அருளினாலே கண்களுக்கும், கற்பினாலே பெண்களுக்கும் பெருமை உண்டாகும். எ-ம்.
------------

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியம் --வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும் பானை பொங்குமோ மேல். 17

இ-ள் . வையத்துப் பாவம் அறும் என்ன அறிந்து - பூமியிலே (சற்பாத்திரத்திற் செய்யப்படுந் தானத்தினாலே) பாவம் நீங்கும் என்று உணர்ந்து -- அன்று இடார்க்கு - அக்காலத் திலே (சற்பாத்திரத்திலே) தானஞ்செய்யாதவருக்கு -- செய் தீவினை இருக்க - செய்த அப்பாவம் (வறுமைக்கு வித்தாய்) இருக்க, -- (இன்று) தெய்வத்தை நொந்தக்கால் - இப்பொழுது கடவுளை வெறுத்தால், --இரு நிதியம் எய்த வருமோ - பெரிய திரவியம் பொருந்த வருமோ, (வாராது.) -- வெறும் பானை மேல் பொங்குமோ - வெறும் பானை (அடுப்பிலே வைத்து எரித்தால்) மேலே பொங்குமோ - (பொங்காது.) எ - று.
இ-ம்: வறியவர் அவ்வறுமைக்கு வித்தாகிய தீவினையைச் செய்த தம்மை நோவாது தெய்வத்தை நோதலிற் பயன் இல்லை . எ-ம்.
-------------

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றா ருகந்தா ரெனவேண்டார் - மற்றோர்

இரணங் கொடுத்தா விடுவ ரிடாரே
சாணங் கொடுத்தாலுந் தாம். 18

இ-ள் . பேர் உலகில் - பெரிய பூமியிலே --பெற்றார் (என) - (இவர் எம்மைப்) பெற்றவர் என்றும் , -- பிறந்தார் (என )- (இவர் எமக்குப் ) பிறந்தவர் என்றும் , -- பெருநாட்டார் (என) (இவர் எம்முடைய பெரிய தேசத்தார் என்றும், -- உற்றார் (என)- (இவர் எம்முடைய) சுற்றத்தார் என்றும் , -- உகந்தார் என - (இவர் எம்மைச்) சிநேகித்தவர் என்றும் -- வேண்டார் - விரும்பாதவராகிய உலோபிகள் , -- மற்றோர் இரணம் கொடுத்தால் இடுவர் - அன்னியரேயாயினும் (தம்முடம்பிலே) காயத்தைச் செய் தாராயின், (அவருக்கு எல்லாங்) கொடுப்பர் -- சரணம் கொடுத்தாலும் இடார் -- (முன் சொல்லப்பட்டவர்) அடைக்கலம் புகு ந்தாராயினும், அவருக்கு ஒன்றுங் கொடார் . எ - று. தாம் ஏ இரண்டும் அசை.
இ-ம்: உலோபிகள் தமக்கு அகிதத்தைச் செய்யும் கள்வர் முதலாயினோருக்கன்றி இதத்தைச் செய்யும் தாய் தந்தை முதலாயினோருக்குக் கொடார். எ-ம்.

--------------

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் -- போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம். 19

இ - ள் வயிற்றின் கொடுமையால் - வயிற்றினுடைய (பசிக்) கொடுமையினாலே, -- சேவித்தும் - (பிறரைச்) சேவித்தும் , -- சென்று இரந்தும் - (பலரிடத்தே) போய் யாசித்தும் , --தெள் நீர்க் கடல் கடந்தும் - தெளிவாகிய நீரையுடைய சமுத்திரத்தைக் (கப்பலேறிக்) கடந்தும், -- பாவித்தும் -- (ஒருவரைப் பெரியவராகப்) பாவித்தும், -- பார் ஆண்டும் - பூமியை ஆண்டும், --பாட்டு இசைத்தும் - (செல்வரைப் புகழ்ந்து) பாட்டுப்பாடியும், -- நாம் உடம்பை நாழி அரிசிக்கே பாழின் போலிப்பம் - நாம் இந்தச்சரீரத்னத நாழியரிசிக்காகவே பாழிலே செலுத்துகின்றேம். எ - று.
இ-ம்: முத்திக்குரிய சாதனத்தைத் தேடும் பொருட்டு அரிதாகக் கிடைத்த சரீரத்தை, அதற்குக் கொடுக்கப்படுங் கூலியாகிய போசனத்தைத் தேடும் பொருட்டே முழுமையும் செலுத்துதலின் மிக்க பேதைமை பிறிதில்லை . எ-ம்.

--------------

அம்மி துணையாக வாறிழிந்த வாறோக்குங்
கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம் - இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும். 20

இ - ள் . கொம்மை முலை பகர்வார்க் கொண்டாட் டம் - குவிவாகிய தனங்களை விற்கின்ற பரத்தையரைக் கொண் டாடுதல் -- அம்மி துணை ஆக ஆறு இழிந்த ஆறு ஒக்கும் - அம்மிக் கல்லே துணையாக ஆற்று வெள்ளத்தில் இறங்கிய தன்மையைப் போலும்; -- (அன்றியும்) மா நிதியம் போக்கி வெறுமைக்கு வித்து ஆய்விடும் - (அது) பெரிய செல்வத்தை அழித்து வறுமைக்குக் காரணமாய்விடும் : -- இம்மை மறுமைக்கு நன்று அன்று - (ஆதலினால்) அது இப்பிறப்பிற்கும் வருபிறப்பிற்கும் நல்லதாகாது . எ - று. பகர்தல் - விற்றல்.

ஓடத்தினாலே கடக்கத்தக்க ஆற்றை அம்மியினாலே கடக்கப் புகுந்தவன் அமிழ்ந்து உயிரை இழத்தல்போல, மனைவியினாலே அநுபவிக்கத்தக்க காமவின்பத்தை வேசையினாலே அநுபவிக்கப் புகுந்தவன் மேகநோயால் வருந்தி உயிரை இழப்பன் ஆதலின், அம்மி துணையாக வாறிழிந்தவாறொக்கு மென்றார்.

இ-ம்: வேசையைப் புணர்ந்தவன் கைப்பொருளை இழந்து மேகநோயால் வருத்தமுற்றுப் பழிபாவங்களை அடைவன். எ-ம்.

------------

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையா டான் 21

இ-ள்: சிவந்த தாமரையாள் - செந்தாமரை மலரில் இருக்கின்ற சீதேவியானவள், -- வஞ்சம் இலார்க்கு - வஞ்சனை இல்லாதவருக்கு -- நீரும் - நீர்வளத்தையும் , -- நிழலும் - நிழல் வளத்தையும் , -- நிலம் பொதியும் நெற்கட்டும் - நிலத்திலே நிறையும் நெற்போரையும், -- பேரும் - பேரையும் , -- புகழும் - கீர்த் தியையும் , -- பெருவாழ்வும் - பெரிய வாழ்வையும் , --ஊரும் - கிராமத்தையும் , -- வரும் திருவும் - வளர்கின்ற செல்வத்தையும் , -- வாழ்நாளும் - நிறைந்த ஆயுளையும் ; -- என்றும் தரும் - எந்நாளும் கொடுத்தருளுவள் . எ - று. தான் அசை.

இ-ம் . வஞ்சனை செய்யாதவருக்குச் சீதேவியினது திருவருளினாலே எல்லா நலமும் உண்டாகும். எ-ம்.

--------------

பாடுபட்டுத் தேடிப் பணத்தை புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானுடரே கேளுங்கள் --கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யநுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். 22

இ - ள். பணத்தைப் பாடு பட்டுத் தேடிப் புதைத்து வைத்து - பணத்தைப் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து (நீங்களும் உண்ணாமல் பிறருக்குக் கொடாமற் பூமியிலே) புதைத்துவை த்து --கேடு கெட்ட மானுடரே கேளுங்கள் - அப்பொருட்கேட்டினால் (சரீரசுகத்தையும் ஆன்மசுகத்தையும் ஒருங்கு) இழந்த மனிதர்களே (நான் சொல்வதைக்) கேளுங்கள் . -- ஆவி கூடு விட்டுப் போயின பின்பு - ஆன்மாச் சரீரத்தைவிட்டு நீங்கிய பின்பு, -- பாவிகாள் அந்தப் பணம் இங்கு ஆர் அநுபவிப்பார்- பாவிகளே, அந்தப் பணத்தை இவ்விடத்து யாவர் அநுபவிப்பார். எ - று . தான் ஏ - இரண்டும் அசை.

இ-ம், பூமியிலே புதைத்து வைக்கப்பட்ட பணம் வைத்தவர் இறந்தபின் அவருக்கு உதவாமற் போவதுமன்றிப் புதைத்தவிடந் தெரிந்து எடுக்கக் கூடாமையினாலே பிறருக்கும் உதவாமற்போம். எ-ம்.

-------------

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே -மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. 23

இ - ள். மன்று ஓரம் சொன்னார் மனை - தருமசபையிலே பக்ஷபாதஞ் சொன்னவருடைய வீட்டிலே , -- வேதாளம் சேரும் - பேய்கள் (வந்து) சேரும்; - வெள்ளெருக்குப் பூக்கும் - வெள்ளெருக்கு (முளைத்து) மலரும், - பாதாள மூலி பட ரும் - பாதாள மூலியென்னுங்கொடி படரும் -- மூதேவி சென்று இருந்து வாழ்வள் - மூதேவியானவள் போய் நிலைபெற்று வாழ்வாள் , -- சேடன் குடிபுகும் - பாம்புகள் குடியிருக்கும் . எ - று, ஏ ஐந்தும் அசை.

இ-ம்: வழக்கோரஞ் சொன்னவர் குடும்பத்தோடு அழிவது மன்றி, அவர் குடியிருந்த வீடும் பாழாம். எ-ம்.

--------------

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ் - மாறில்
உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. 24

இ-ள்: நீறு இல்லா நெற்றி பாழ் - விபூதியில்லாத நெற்றி பாழாகும்; -- நெய் இல்லா உண்டி பாழ் - நெய்யில்லாத போசனம் பாழாகும். -- ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - நதியில்லாத ஊருக்கு அழகு பாழாகும் ;-- மாறு இல் உடற்பி றப்பு இல்லா உடம்பு பாழ் - மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு பாழாகும் -- மடக்கொடி இல்லா மனை பாழே - (இல்லறத்திற்குத் தக்க மனைவியில்லாத வீடு பாழேயாகும். எ-று.
இ-ம் . விபூதியினாலே நெற்றியும், நெய்யினாலே போசன ம், நதியினாலே ஊரும், சகோதரராலே உடம்பும், மனைவியினாலே வீடும் சிறப்படையும். எ-ம்.

--------------

ஆன முதலி லதிகஞ் செலவானான்
மான மழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு, 25

இ - ள். ஆன முதலில் செலவு அதிகம் ஆனான் (தனக்குக் கிடைத்த முதற்பொருளுக்குச் செலவு அதிகமானவன், -- மானம் அழிந்து - மானங்கெட்டு , -- மதி கெட்டு - அறிவு இழந்து , -- போன திசை எல்லார்க்கும் கள்ளன் ஆய் - (தான் ஓடிப்) போன திசையிலும் எல்லாருக்கும் கள்ளனாகி , -- ஏழ் பிறப்பும் தீயனாய் - எழுவகைப் பிறப்புக்களினும் பாவம் உடையவனாகி , -- நல்லார்க்கும் பொல்லன் ஆம் - (தன்னிடத்து அன்பு வைத்த) பெண்டிர்களுக்கும் பொல்லாதவனாவான். -- நாடு (இதனை) ஆராய்ந்து அறிவாயாக. எ - று.
இ-ம்: வரவுக்கு அதிகமாகச் செலவு செய்பவன் பழிபாவங்களை அடைவன் ஆகலின், வரவுக்குத் தக்க செலவு செய்ய வேண்டும். எ-ம்.

------------

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம். 26

இ - ள். பசி வந்திட - பசிநோய் ஒன்று மாத்திரம் வந்தால், -- மானம் - மானமும் , --குலம் - குலமும், --கல்வி - கல்வியும் , -- வண்மை - வாய்மையும், -- அறிவுடைமை - அறிவு டைமையும் , --தானம் - கொடையும் , -- தவம் - தவமும், -- உயர்ச்சி - உயர்வும் , -- தாளாண்மை - தொழின் முயற்சியும், -- தேனின் கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் - தேன்பெருக்குப்போலத் தோன்றுகின்ற சொல்லையுடைய மங்கையர்மேல் ஆசைவைத்தலும் ஆகிய --பத்தும் பறந்து போம் -இப்பத்தும் விட்டோடிப்போம்.எ - று.
இ-ம்: மான முதலிய எல்லா நலங்களையும் கெடுத்தலினாலே பசிநோயினுங் கொடியது பிறிதில்லை. எ-ம்.

-------------

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்-- ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல். 27

இ - ள். ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்று ஆகும் -- ஒரு பொருளைப் பெற நினைந்தால், அப்பொருள் கிடை யாமல் வேறொரு பொருள் கிடைத்தாலும் கிடைக்கும் -- அன்றி அதுவரினும் வந்து எய்தும் -- அப்படியல்லாமல் அப்பொருளே வந்து கிடைத்தாலும் கிடைக்கும்; -- ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் - (இன்னும்) ஒருபொருளை நினையாதிருக்கு முன்னே அது தானே வந்து நின்றாலும் நிற்கும். -- எனை ஆளும் ஈசன் செயல் - (இவைகளெல்லாம்) என்னை ஆண்டருளும் கடவுளுடைய செய்கைகளாகும். எ - று.
இ-ம் . இருவினைகளுக்கீடாக இன்பத்துன்பங்களை ஊட்டும் கடவுளுடைய கருத்தின் படியேயன்றி ஆன்மாக்களுடைய கருத்தின்படி ஒன்றும் நடவாது. எ-ம்.

------------

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந்தெண்ணுவன – கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சரத்துணையுஞ் சஞ்சலமே தான். 28

இ - ள் . கண்புதைந்த மாந்தர் - அகக்கண் குருடாக இருக்கின்ற மனிதர் -- உண்பது நாழி - உண்பது ஒரு நாழியரிசி யன்னமேயாகும்;--உடுப்பது நான்குமுழம் - (அவர்) உடுப்பது நான்குமுழ வஸ்திரமேயாகும்; --(இப்படியாகவும்) --நினைந்து எண்ணுவன எண்பது கோடி - (அவர்) நினைத்து எண்ணுங்காரியங்களோ எண்பது கோடியாகும்: - (ஆதலினால்) -- மண்ணின் கலம் போலச் சரம் துணையும் குடிவாழ்க்கை சஞ்சலமே - மட் பாத்திரம் அழிந்தாற்போல் (அவர் சரீரம்) அழியும் வரையும் (அவருடைய) குடிவாழ்க்கையினாலே துன்பமே விளையும். எ அ . தான் அசை
இ-ம்: உள்ளதே போதும் என்று திருப்தி அடையாதவர் சரங்காறும் அடைவது துன்பமேயன்றிப் பிறிதில்லை. எ-ம்.

------------

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை - சுரந்தமுதங்
செற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். 29

இ - ள் . மரம் பழுத்தால் - மரம் பழுத்திருந்தால், --வா என்று வௌவாலைக் கூவி இரந்து அழைப்பார் அங்கு யாவரும் இல்லை -- (இப்பழத்தைத் தின்னுதற்கு) வா என்று வௌவாலைக் கூவி வேண்டி அழைப்பவர் அம்மரத்தருகில் ஒருவரும் இல்லை , -- கன்று ஆ அமுதம் சுரந்து தரல்போல் கரவாது அளிப்பரேல் -- கன்றையுடைய பசுவானது பாலைச் சுரந்து கொடுத்தல்போல ஒளிக்காமற் கொடுப்பாராயின், -- உலகத்தவர் உற்றார் -- உலகத்தார் (அவ்வௌவால்போலத் தாமேவந்து) உறவி னராவார். எ-று.
இ-ம், கொடையாளருக்கு எல்லாரும் தாமே உறவினராவார். எ-ம்.

-------------

தாந்தாமுன் செய்தவினை தாமே யநுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே - வேந்தே

ஒறுத்தாரை யென் செயலா மூரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ விதி 30

இ - ள், வேந்தே - அரசனே, -- முன் தாம் தாம் செய்தவினை - முற்பிறப்பிலே தாம் தாம் செய்த நல்வினை தீவினைகளை -- பூந்தாமரையோன் பொறி வழியே தாமே அநுபவிப்பார் - தாமரைமலரில் இருக்கின்ற பிரமா விதித்தபடியே தாமே அநுபவிப்பார்கள் , -- ஒறுத்தாரை என் செயலாம் - (தீவினையினாலே தூண்டப்பட்டுத் தீங்கு செய்தவரை நாம் யாது செய்யலாம். -- ஊர் எல்லாம் ஒன்றா வெறுத்தாலும் விதிபோமோ - ஊரிலுள்ளார் எல்லாருந் (துணையாகத்) திரண்டு வெறுத்தாலும் விதி போகுமோ (போகாது.) எ - று.

இ-ம்: தமக்கு ஒருவன் துன்பஞ்செய்யின், அது தாம் முன் செய்த தீவினைக்கீடாகக் கடவுளாலே தமக்குக்கிடைத்த தென்று அமைவதே அறிவு. எ-ம்.

--------------

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சாலும்
ஒழுக்க முயர்குலத்தி னன்று வழுக்குடைய
வீரத்தினன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி. 31

இ - ள். இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று - இலக்கணவழுக்களையுடைய செய்யுளினும் இசை நல்லது, -- உயர் குலத்தின் சாலும் ஒழுக்கம் நன்று - உயர்வாகிய குலத்தினும் மாட்சிமைப்பட்ட ஒழுக்கம் நல்லது. -- வழுக்கு உடைய வீரத்தின் விடா நோய் நன்று -- தவறுதலையுடைய வீரத்தினும் தீரா வியாதி நல்லது , -- பழிக்கு அஞ்சாத் தாரத்தின் தனி நன்று - பழிச்சொல்லுக்கு அஞ்சாத மனைவியோடு கூடி வாழ்தலினும் தனியே இருத்தல் நல்லது . எ - று.

இ-ம்: இலக்கணப் பிழையுடைய பாட்டும், நல்லொழுக்க மில்லாத உயர்குலமும், தவறுதலடையும் வீரமும், கற்பில்லாத மனைவியோடு கூடிய இல்வாழ்க்கையுந் தீரா வசையை விளைவிக்கும். எ-ம்.

----------

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வ
மாறிடு மேறிடு மாநிலத்தீர் சோறிடுந்
தண்ணீரும் தாருந் தருமமே சார்பாக

உண்ணீர்மை விறு முயர்ந்து. 32

இ - ள் . மா நிலத்தீர் - பெரிய பூமியிலுள்ளவர்களே , -- ஆறு இடும் மேடும் மடுவும் போல் - ஆற்று வெள்ளத்தினால் உண்டாக்கப்படும் மேடும் பள்ளமும் போல, -- செல்வம் ஏறிடும் மாறிடும் - செல்வம் வளர்வதும் தேய்வதுமாய் இருக்கும்: -- (ஆதலினால்) சோறு இடும் - (இரப்பவருக்கு உண்ண) அன்னத்தை இடுங்கள் - தண்ணீரும் வாரும் - (குடிக்கச்) சலத்தையும் தாருங்கள் --- தருமமே சார்பு ஆக உள் நீர்மை உயர்ந்து வீறும் - (இப்படிச் செய்து வருவீர்களானால்,) இந்தத்தருமமே துணையாக உள்ளத்திலே (சுத்தியாகிய) தன்மை ஓங்கி விளங்கும். எ - று . ஆம் அசை.
இ-ம் . நிலையில்லாத செல்வம் உள்ள பொழுதே இரப்பவர்களுக்கு அன்னபானியங்களைக் கொடுக்கிற் சித்த சுத்தி உண்டாகும். எ-ம்.

-------------

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குடைப் பாறை பசுமாத்தின்
வேருக்கு நெக்கு விடும். 33

இ-ள்: வேழத்தில் பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது - (வலிய) யானையின் மேலே பட்டுருவும் அம்பானது (மெல்லிய) பஞ்சின் மேலே பாயாது -- (அதுபோல) - வெட் டெனவை மெத்தெனவை வெல்லா - வலிய சொற்கள் மெல்லிய சொற்களை வெல்லமாட்டா -- நெடு இருப்புப் பாரைக்கு நெக்கு விடாப் பாறை - நெடுமையாகிய இருப்புப் பாறைக்குப் பிளவாத கருங்கற்பாறையானது -- பசு மரத்தின் வேருக்கு நெக்கு விடும் - பச்சைமரத்தின் வேருக்குப் பிளந்துபோம். எ - று. ஆம் அசை.
இ-ம்: வலிய சொல்லே மெல்லிய சொல்லுக்குத் தோற்றுப்போம். எ-ம்.

------------

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 34

இ - ள். கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் - (ஒருவன்)

படியாதவனே யாயினும் (அவன்) கையிலே பொருண்மாத்திரம் இருந்தால், -- எல்லாரும் சென்று எதிர்கொள்வர் - (அவனை) யாவரும் போய் எதிர்கொண்டு உபசரிப்பர் -- இல்லானை இல்லாளும் வேண்டாள் - (படித்தவனே யாயினும் பொருள்) இல்லாதவனை (அவன்) மனைவியும் விரும்பாள் , -- ஈன்று எடுத்த தாய் வேண்டாள் - (அவனைப்) பெற்று வளர்த்த மாதாவும் விரும்பாள் ; -- அவன் வாயில் சொல் செல் லாது - அவன் வாயிற் பிறக்குஞ் சொல்லானது பயன் படாது. எ - று. அங்கு, மற்று அசை.

இ-ம்: கல்லாதவனேயாயினும் பொருளுடையவனை எல்லாரும் மதிப்பர்; கற்றவனேயாயினும் பொருளில்லாதவனை ஒருவரும் மதியார். எ-ம்.

------------

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்-
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே -- தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு. 35

இ - ள். பூவாதே காய்க்கும் மரமும் உள - பூவாமலே காய்க்கின்ற மரங்களும் உண்டு -- (அதுபோல ) - மக்களுளும் ஏவாதே நின்று தாம் உணர்வார் உளர் -- மனிதர்களுள்ளும் ஏவாமலே இருந்து தாமே அறிந்து செய்ய வல்லவரும் உண்டு -- தூவா விரைத்தாலும் நன்று ஆகா வித்து என - தூவி விரைத்தாலும் முளைத்துப் பயன்படாத விதைபோல், -- பேதைக்கு உரைத்தாலும் உணர்வு தோன்றாது - மூடனுக்கு (எடுத்து விளங்கச்) சொன்னாலும் (அதனை அறியும் ) அறிவு (அவனிடத்து) உண்டாகாது. எ - று.

இ-ம்: குறிப்பறிந்து செய்வோரே அறிவுடையோர்; அறிவிக்கவும் அறிந்து செய்யாதவர் மூடர். எ-ம்.

--------

நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்
கொண்ட கருவளிக்குங் கொள்கைபோ--லொண்டொடி
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்
மாதர்மேல் வைப்பார் மனம். 36

இ-ள்: ஒள் தொடி - ஒள்ளிய வளையலை அணிந்தவளே , -- நண்டு சிப்பி வேய் கதலி –

நண்டும் சிப்பியும் மூங்கிலும் வாழையும் , --நாசம் உறும் காலத்தில் - தாம் அழிவை அடையுங்காலத்திலே, -- கொண்ட கரு அளிக்கும் கொள்கை போல் - (முறையே தாம்) கொண்ட (குஞ்சும் முத்தும் அரிசியும் காய்க்குலையும் ஆகிய) கருக்களை ஈனுந்தன்மை போல , -- (மனிதர்கள்) - போதம் தனம் கல்வி பொன்ற வரும் காலம் - ஞானமும் செல்வமும் வித்தையும் அழிய வருங்காலத்திலே -- அயல்மாதர்மேல் மனம் வைப்பார் - பிறர்மனைவியர்மேல் மனம் வைப்பார்கள் . எ - று.

இ-ம்: ஒருவன் பிறன் மனையாளை இச்சிக்கின், அது அவனிடத்துள்ள ஞானம் செல்வம் கல்வி என்னும் மூன்றுங் கெடுத ற்கு அறிகுறியாகும். எ-ம்.

-------------

வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்துமில்லை -- நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லால் கவலைப்படே னெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி. 37

இ - ள். வேதம் முதலாம் அனைத்து ஆய நூலகத்தும் - வேத முதலாகிய எல்லா நூல்களினுள்ளும் (ஆராய்ந்தால்) -- வினைப்பயனை வெல்வதற்கு - இருவினைப்பயனை வெல்வதற்கு (உபாயம் ) -- அது நினைப்பு எனக் கண்ணுறுவது அல்லால் இல்லை - அவ்வினைப்பயன் (நம்முடைய) நினைவாலாவது என்று அறிவதல்லாமல் வேறு இல்லை. -- நெஞ்சே கவலைப்படேல்- மனமே கவலையை அடையாதே -- மெய் விண் உறுவார்க்கு விதி இல்லை - நித்தியமாயுள்ள ஞானாகாசமாகிய பதியோடு கலந்து நிற்பவருக்கு ஊழ் இல்லை . எ - று.

இ-ம்: பரஞானத்தினாலே பதியைத் தெளிந்து நோக்கி அன்பு செய்யப்பெற்றவர் அப்பதியையேயன்றிப் பிராரத்தவாக்களை தாக்குதற்குரிய மற்றைப் பதார்த்தங்களைச் சிறிதும் காணாராகலின், அவருக்கு விதி இல்லை. எ-ம்.

-------------

நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்றும்
அன்றென்று மாமென்று மாகாதே - நின்றநிலை
தானதாந் தத்துவமாமஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவர் தேடும் பொருள். 38

இ - ள். நன்று என்றும் - (இது) நல்லது என் றும், -- தீது என்றும் - (இது) தீயது என்றும் , -- நான் என்றும் (இது செய்தவன்) நான் என்றும், -- தான் என்றும் - (இது செய்தவன்) அவன் என்றும், -- அன்று என்றும் - (இது) அன்று என்றும், - ஆம் என்றும் - (இது) ஆகும் என்றும் , -- ஆகாதே நின்ற நிலை - பேதஞ்செய்யாமலே (பதியினுள் அடங்கி இரண்டறக் கலந்து) நின்ற நிலையே, -- தான் அது ஆம் தத்துவம் ஆம் - (ஆன்மா வாகிய) தான் (பதியாகிய) அதுவாகுகின்ற உண்மை நிலையாகும் -- சம்பு அறுத்தார் யாக்கைக்குத் தேடும் பொருள் போனவர் - சம்பை அறுத்தவர் அதனைக் கட்டுத்தற்குத் தேடும் பொருள் அதுவன்றி வேறில்லாமற் போனவாறுபோலப் பாசத்தின் வேறாகக் காணப்பட்ட தன்னைப் பதியினுள்ளே அடக்குதற்குத் தேடும் பொருள் தானன்றி வேறில்லை. எ - று.

இ-ம் ஆன்மாப் பதியின் வேறாயினும் கண்ணொளியும் சூரியனொளியும் போல வேற்றுமை சிறிதுந் தோன்றாவண்ணம் ஒற்றித்து நிற்கும் நிலையே தான் அதுவாதலாகிய உண்மை நிலை. எ-ம்.

------------

முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறானாயிற் - செப்புங்
கலையளவே ஆகுமாங் காரிகையார் தங்கண்
முலையளவே ஆகுமாம் மூப்பு. 39

இ - ள். முப்பது ஆம் ஆண்டு அளவில் - முப்பது வயதினளவிலே -- மூன்று அற்று - (மலம் மாயை கருமம் என்னும் பந்தம் மூன்றும் நீங்கி -- ஒருபொருளைத் தப்பாமல் தன்னுள் பெறான் ஆயின் - ஒப்பில்லாத முதற்பொருளாகிய பதியைத் தவறாமல் தன்னுள்ளே (அநுபூதிஞானத்தினால் ஒருவன்) அடையானாயின், -- செப்பும் கலை அளவே ஆகும் - (அம்முதற் பொருள் அவனுக்கு அவன்) கற்ற சாத்திர ஞானத்திளைவேயாகும் -- முப்புக் காரிகையார் தங்கள் முலை அளவே ஆகும் - (அவன் பின் வரும்) முதுமைப் பருவத்திலே (தான் கண்ட) பெண்களுடைய தனத்தினளவாகவே (தளர்ச்சியுடையவன்) ஆவன் (ஆதலால் ) எ - று. ஆம் இரண்டும் அசை.

இ-ம்: அநுபூதிஞானம் நிட்டையினாலல்லாது பெறப்படாமையாலும், நிட்டை உடம்பும் அறிவும் தளர்ச்சியடையும் முதுமைப்பருவத்திற் சித்திக்க மாட்டாமையாலும், ஞானாசாரியரை அடைந்து ஞானசாத்திரங்களைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கூடல் என்னும் நான்கையும் இளமைப் பருவத்திற்றானே செய்தல் வேண்டும். எ-ம்.

-------------

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும
மூவர் தமிழு முனிமொழியுங் -- கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். 40

இ-ள்: தேவர் குறளும் - திருவள்ளுவநாயனாருடைய திருக்குறளும் , -- திரு நான்மறை முடிவும் - சிறப்புப் பொருந்திய நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும், -- மூவர் தமிழும் - திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் திரு நாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் சமயகுரவர் ) மூவர்களுடைய (தேவாரமாகிய) தமிழ் வேதமும், -- முனி மொழியும் - வியாச முனிவருடைய வேதாந்த சூத்திரமும் , -- கோவை திருவாசகமும் - (திருவாதவூரடிகளுடைய) திருக்கோவையார் திருவாசகங்களும் , -- திருமூலர் சொல்லும் - திருமூல நாயனாருடைய திருமந்திரமும் , -- ஒரு வாசகம் என்று உணர் - ஒருபொருளையே குறித்த வாக்கியங்களென்று அறிவாயாக, எ - று.
இ-ம்: திருக்குறண் முதலிய நூல்களெல்லாம் வேறு வேறு வாக்கியங்களாகத் தோன்றினும், பதிலக்கணமும் பசுலக்கணமும் பந்தலக்கணமும் முத்திலக்கணமும் ஆகிய இவைகளை ஒரு தன்மையாகவே அறிவிக்கும் நூல்களாம். எ-ம்.

உபநிடதமெனினும், வேதாந்தமெனினும், வேதசிரசெனினும், பிரபலசுருதியெனினும் பொருந்தும். வேதாந்த சூத்திரமெனினும், பிரம மீமாஞ்சையெனினும், உத்தர மீமாஞ்சையெனினும் பொருந்தும்.[*]

[*] வேதாந்த சூத்திரத்துக்கு நீலகண்டசிவாசாரியர், சங்கராசாரியர், இராமாநுஜாசாரியர், மத்துவாசாரியர் என்னும் நால்வர் பாஷியங்கள் செய்தனர். சைவர்களாற் கொள்ளப்படுவது நீலகண்டபாஷியம், ஸ்மார்த்தர்களாற் கொள்ளப்படுவது சங்கரபாஷியம், வைஷ்ணவர்களாற் கொள்ளப்படுவது இராமாநுஜபாஷியம், மாத்துவர்களாற் கொள்ளப்படுவது மத்துவபாஷியம்

**நல்வழியுரை முற்றிற்று.**

## 4. ஔவையார் அருளிச்செய்த வாக்குண்டாம்.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களால் திருத்தப்பட்ட உரையுடன் அவர்கள் சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர் பொன்னம்பல பிள்ளையால் சென்னப்பட்டணம் வித்தியா நுபாலனயந்திரசாலையில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு, விரோதிகிருது ௵ ஆடி ௴.

இதன் விலை அணா - 1000.

---------------

**காப்பு.**

வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலரா
ணோக்குண்டா மேனி நுடங்காது -- பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

இதன் பொருள். துப்பு ஆர் திருமேனித் தும்பிக்கையான் பாதம் - பவளம் போலும் (சிவப்பாகிய) திருமேனியையும் துதிக்கையையும் உடைய விநாயகக் கடவுளுடைய திருவடிகளை, --பூக்கொண்டு - பூவைக் (கையிலே ) கொண்டு -- தப்பாமல் சார்வார் தமக்கு - தவறாமல் அடைந்து பூசை செய்வோருக்கு,-- வாக்கு உண்டாம் - (நல்ல) வாக்கு உண்டாகும், -- நல்ல மனம் உண்டாம் - நல்ல மனம் உண்டாகும். -- மா மலராள் நோக்கு உண்டாம் - பெருமை பொருந்திய செந்தாமரைப் பூவில் இருக்கின்ற சீதேவியினுடைய அருட்பார்வை உண்டாகும், -- மேனி நுடங்காது - (அவருடைய) சரீரம் (பிணிகளால்) வாடிப் போகாது என்றவாறு.

இதனது தாற்பரியம். விநாயகக் கடவுளுடைய திருவடிகளைப் பூசிப்பவருக்குக் கல்வியும் நல்லமனமும் செல்வமும் ஆரோக்கியமும் உண்டாகும் என்பதாம்.

----------

**நூல்**

நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா -- நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் றருத லால். 1

இ - ள். நின்று தளரா வளர் தெங்கு - நிலைபெற்றுச் சோரா மல் வளர்கின்ற தென்னமரமானது , -- தாள் உண்ட நீரை - (தன்) அடியினாலே உண்ட (வெறு) நீரை,-- தலையாலே தான் தருதலால் - (தன்) முடியினாலே (மதுரமாகிய இளநீராக்கித்) தானே தருதலினால் , -- ஒருவற்கு நன்றி செய்தக்கால் - (நற்குணமுடைய) ஒருவனுக்கு ஓருபகாரத்தைச் செய்தால், --அந் நன்றி என்று தரும் கொல் என வேண்டா - அந்த உபகாரத்தை (அவன்) எப்பொழுது செய்வானோ என்று சந்தேகிக்க வேண்டுவதில்லை. எ - று.

இதனது தாற்பரியம். நற்குணமுடையவனுக்கு உபகாரஞ் செய்தால், அவன் அதனினுஞ்சிறந்த உபகாரத்தை வணக்கத்தோடு விரைந்து செய்வன் என்பதாம்.

-------------

நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரங்
கன்மே லெழுத்துப்போற் காணுமே -- யல்லாத
வீரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகார
நீர்மே லெழுத்திற்கு நேர். 2

இ - ள். நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் - நற்குணமுடையவராகிய ஒருவருக்குச் செய்த உபகாரமானது , -- கல் மேல் எழுத்துப்போல் காணும் - கல்லின் மேல் எழுதப்பட்ட எழுத்தைப் போல விளங்கும் -- அல்லாத ஈரம் இலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம் - மற்ற அன்பில்லாத மனமுடையவருக்குச் செய்த உபகாரமானது -- நீர்மேல் எழுத்திற்கு நேர் - சலத்தின் மேல் எழுதப்பட்ட எழுத்துக்கு ஒப்பாகும். எ - று.
ஏ அசை.

இ-ம் . நல்லவருக்குச் செய்த உபகாரம் என்றும் நிலைபெற் து விளங்கும்; தீயவருக்குச் செய்த உபகாரம் செய்த அப்பொழுதே அழிந்து விடும். எ-ம்.

------------

இன்னா விளமை வறுமைவந் தெய்தியக்கா
லின்னா வளவி லினியவு - மின்னாத
நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே
யாளில்லா மங்கைக் கழகு. 3

இ-ள்: இளமை வறுமை வந்து எய்தியக்கால் இன்னா - (இன்பத்தைத் தருகின்ற ) இளமைப் பருவமானது , வறுமை வந்து அடைந்தால், துன்பத்தைத் தருவதாகும், -- இன்னா அளவில் இனியவும் இன்னாத - துன்பத்தைத் தருகின்ற முதுமைப் பருவ த்தில் இனியனவாகிய பொருள்களும் துன்பத்தைத் தருவனவாம் -- (அவைகள்) நாள் அல்லா நாள் பூத்த நல் மலரும் - சுப காலமல்லாத காலத்திலே பூத்த நல்லபூவையும் , -- ஆள் இல்லா மங்கைக்கு அழகும் போலும் - அனுபவிப்பவன் இல்லாத மங்கைப்பருவத்தை யுடையவளுக்கு உண்டாகிய அழகையும் போலும். எ - று. ஏ அசை. இன்னா - துன்பம். இன்னாவளவு - முதுமைப்பருவம்.
இ-ம்: வறுமையோடு கூடிய இளமையும், முதுமையோடு கூ டிய செல்வமும் பயன்படாது துன்பஞ்செய்யும். எ-ம்.

----------

அட்டாலும் பால் சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலு நண்பல்லார் [*] நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 4

இ-ள்: பால் அட்டாலும் சுவையில் குன்றாது - பாலானது (தன்னைக் காய்ச்சினாலும் (தன்) மதுரத்திற்குறையாது மிகும், -- சங்கு சுட்டாலும் வெண்மை தரும் - சங்கானது (தன்னை நீறாகச்) சுட்டாலும் (மிகுந்த வெள்ளை நிறத்தையே கொடுக்கும் -- (அவைபோல் ) - மேன்மக்கள் கெட்டாலும் மேன்மக்களே - மேலோர் (தாம் தம்முடைய சிநேகராலே) கெட்டாலும் (தம்முடைய நற்குணம் வேறுபடாமல்) மேலோராகவே விளங்குவார். --நண்பு அல்லார் அளவளாய் நட்டாலும் நண்பு அல்லர் --சிநேக குணம் இல்லாத கீழோர், (தம்மோடு ஒருவர் கலந்து) சிநேகித்தாலும், சிநேகராகார் . எ - று.
இ-ம்: மேலோர், தஞ் சிநேகராலே தமக்குக் கேடுவந்தவிட த்தும், அவருக்கு நன்மையே செய்வர் : ஆதலின், அவரோடு தானே சிநேகித்தல் வேண்டும். எ-ம்.

[*] தொல்காப்பியப் பொருளதிகாரத்துச் செய்யுளியலிலே "'வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்" என்னுஞ் சூத்திரத்துரையிலே நச்சினார்க்கினியர் வெண்பாவினிடையினும் முச்சீரடி சிறுபான்மை வருமெனக் கூறி, இவ்வெண்பாவையே உதாரணமாகக் காட்டினர்.

------------

அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
யெடுத்த கருமங்க ளாகா -- தொடுத்த
வுருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா. 5

இ - ள். தொடுத்த உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம் - கிளைத்த வடிவத்தால் நீண்ட உயர்வாகிய மரங்களெல்லாம் , --பருவத்தால் அன்றிப் பழா - (அது அது பழுக்குங்) காலம் வந்தாலல்லாமல், பழாவாம். --(அதுபோல ) - அடுத்து முயன்றாலும் - மேலும் மேலும் முயற்சி செய்தாலும் , --ஆகும் நாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா - முடியுங்காலம் வந்தால் அல்லாமல் எடுத்த தொழில்கள் முடியாவாம். எ - று.
இ-ம் . யாதொரு தொழிலையும் முடியுங்காலம் அறிந்து தொடங்கல் வேண்டும். எ-ம்.
---------

உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ -- கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கிற்
றளர்ந்து வளையுமோ தான். 6

இ - ள். கல் தூண் - கல்லுக்கம்பமானது, -- பெரும் பாரம் தாங்கின் பிளந்து இறுவது அல்லால் - பெரியபாரத்தைத் தாங்கினாற் பிளந்து ஓடிவதல்லாமல் , --தான் தளர்ந்து வளையுமோ - தான் தளர்ந்து வளையுமோ (வளையாது.) -- (அதுபோல) - உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர் - (தமக்கு ஆபத்து)வந்தவிடத்தே தம்முயிரைவிடுங் குணமுடையவர். -- பற்றலரைக் கண்டால் பணிவரோ - தம்பகைவரைக்கண்டால், வணங்குவாரோ (வணங்கார்.) எ - று.
இ-ம்: மானமுடையவர் ஆபத்து வந்தபோது உயிரை விடி னும் விடுவரேயன்றி மானத்தை விடார் . எ-ம்.
--------------

நீரளவே யாகுமா நீராம்ப றான்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு -- மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான் பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம். 7

இ-ள் . நீர் ஆம்பல் நீர் அளவே ஆகும் -- நீரில் இருக்கின்ற அல்லியானது அந்த நீரினுடைய உயரத்தினளவாகவே உண்டாகும். -- (அதுபோல்) -- நுண் அறிவு தான் கற்ற நூல் அளவே ஆகும் - (ஒருவனுக்கு) நுட்பமாகிய அறிவானது தான் கற்ற நூலினளவாகவே உண்டாகும், -- தான் பெற்ற செல்வம் மேலைத் தவத்து அளவே ஆகும் - தான் பெற்ற செல்வமானது முற்பிறப்பிற்செய்த தவத்தினளவாகவே உண்டாகும், - குணம் குலத்து அளவே ஆகும் - குணமானது (தான் பிறந்த) குலத்தினள வாகவே உண்டாகும். எ - று. ஆம் மூன்றும் அசைநிலை.

இ-ம்: ஒருவருக்கு அறிவு நூலினளவாகவும், செல்வம் தவத்தினளவாகவும், குணம் குலத்தினளவாகவும் உண்டாகும். எ-ம்.

----------------

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவு நன்றே -- நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று. 8

இ-ள்: நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நல்லவரைக் (கண்களாலே) காணுதலும் நல்லதே, -- நல்லார் நலம் மிக்க சொல் கேட்பதுவும் நன்றே - நல்லவருடைய பயன் நிறைந்த சொல்லைக் (காதுகளினாலே) கேட்குதலும் நல்லதே , -- நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே - நல்லவருடைய நற்குணங்களை (வாயினாலே) பேசுதலும் நல்லதே, --அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று - அந்நல்லவரோடு கூடி இருத்தலும் நல்லதே . எ - று.

இ-ம்: நல்லவரைக் காணினும், அவர் சொல்லைக் கேட்பினும், அவர் குணங்களைப் பேசினும், அவரோடு கூடி இருப்பினும் நல்லறிவும் நல்லொழுக்கமும் தலைப்படும். எ-ம்.

-------------

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே -- தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. 9

இ - ள். தீயாரைக் காண்பதுவும் தீதே - தீயவரைக் (கண்களாலே) காணுதலும் தீயதே , -- தீயார் திரு அற்ற சொல் கேட்பதுவும் தீதே - தீயவருடைய பயன் இல்லாத சொல்லைக் (காதுகளினாலே) கேட்குதலும் தீயதே, -- தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீதே - தீயவருடைய தீக்குணங்களை (வாயினாலே) பேசுதலும் தீயதே. -- அவரோடு இணங்கி இருப்பதுவும் தீது - அத்தீயவரோடு கூடி இருத்தலும் தீயதே . எ - று.
இ-ம்: தீயவரைக் காணினும், அவர் சொல்லைக் கேட்பினும், அவர் குணங்களைப் பேசினும், அவரோடு கூடியிருப்பினும் தீயறிவும் தீயொழுக்கமுமே தலைப்படும். எ-ம்.

----------------

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாந் --தொல்லுலகி
னல்லா ரொருவ ருளரே யவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை. 10

இ-ள்: நெல்லுக்கு இறைத்த நீர் - நெற்பயிரின் பொருட்டு இறைக்கப்பட்ட சலம் ,-- வாய்க்கால் வழி ஓடி - கால்வாய் வழியால் ஓடி, --ஆங்குப் புல்லுக்கும் பொசியும் - அங்கே இருக்கின்ற புல்லுகளுக்குங் கசிந்தூறும் :-- (அதுபோல ) - தொல் உலகில் நல்லார் ஒருவர் உளரே - பழமையாகிய உலகத்திலே நல்லவர் ஒருவராயினும் இருப்பாரே, --அவர் பொருட்டு எல்லார்க் கும் மழை பெய்யும் - அவர்பொருட்டாகவே எல்லாருக்கும் மழை பெய்யும். எ - று . ஏ ஆம் இரண்டும் அசை.
இ-ம் . நல்லவரைச் சேர்ந்த பிறரும் பயன் கொள்வர் எ-ம்.

-------------

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனான் முளையாதாங் -- கொண்டபே
ராற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
யேற்ற கருமஞ் செயல். 11

இ-ள்: பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும் - (உமி நீங்குதற்கு) முன்னே முளைப்பதும் அரிசியேயாயினும், -- உமி விண்டு போனால் முளையாது - உமி நீங்கிப்போனால் (அவ்வரிசி) முளையாது -- (அதுபோல) - கொண்ட பேர் ஆற்றல் உடையார்க்கும் - (தம்மிடத்து) நீங்காத பெரிதாகிய வல்லமையை உடையவருக்கும் , --

--அளவு இன்றி ஏற்ற கருமம் செயல் ஆகாது - துணை வலி இல்லாமல் எடுத்துக்கொண்ட தொழிலைச் செய்தல் முடியாது . எ - று. ஆம் அசை.
இ-ம்: எடுத்த கருமத்தை முடித்தற்கு மிக்க வல்லமையுடையவருக்கும் துணைவலியின்றி முடித்தல் இயலாது. எ-ம்.

-------------

மடல்பெரிது தாழை மகிழினிது கந்த
முடல் சிறிய ரென்றிருக்க வேண்டா -- கடல் பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூற
லுண்ணீ ரு மாகி விடும். 12

இ-ள்: தாழை மடல் பெரிது - தாழம்பூ [*] இதழ்களினாலே பெரிதாயிருக்கின்றது -- மகிழ் கந்தம் இனிது - மகிழம்பூ (இதழ்களினாலே சிறிதாயினும்) வாசனையினாலே (தாழம்பூவினும்) இனிதாயிருக்கின்றது, -- கடல் பெரிது - சமுத்திரம் பெரிதா யிருக்கின்றது. -- மண் நீரும் ஆகாது - (ஆயினும் அதிலுள்ள நீர் உடம்பழுக்கைக்) கழுவுதற்குத் தக்க நீருமாகாது , -- அதன் அருகு சிற்றூறல் உண் நீரும் ஆகி விடும் - அதன் பக்கத்தே சிறிய மணற்குழியிற் சுரக்கும் ஊற்று நீர் குடிக்கத்தக்க நீருமாகும். -- (ஆதலினால்) - உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - (ஒருவரை ) உருவத்தினாலே சிறியவரென்று (மதியாமல்) இருக்க வேண்டாம். எ - று. மண்ணுதல் – கழுவுதல்

. ஏ அசை

இ-ம்: இவர் சிறிது பயன்படுவர் இவர் பெரிது பயன்படுவர் என்றும், இவர் ஒருவிதத்தாலும் பயன்படார் இவர் பலவிதத்தாலும் பயன்படுவர் என்றும், அவரவர் குணங்களாலன்றி உருவத்தால் அறிதல் கூடாது. எ-ம்.
[*] தாழை - தென்னை என்பாருமுளர்.

----------

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையல்ல நல்ல மரங்கள் - சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். 13

இ - ள். கவை ஆகி - கிளைகளை உடையவைகளாகியும் , கொம்பு ஆகி - கொம்புகளை உடையவைகளாகியும் , -- காட்டு அகத்து நிற்கும் அவை நல்ல மரங்கள் அல்ல - காட்டினுள்ளே நிற்கின்ற அந்த மரங்கள் எல்லாம் நல்ல மரங்கள் அல்ல,-- சவை நடுவே நீட்டு ஓலை வாசியாநின்றான் - சபையின் நடுவே (ஒருவர்) நீட்டிய ஓலையை வாசிக்க மாட்டாமல் நின்றவனும், -- குறிப்பு அறிய மாட்டாதவன் - (ஒருவருடைய) குறிப்பை அறியமாட்டாதவனுமே, -- நல் மரம் - நல்லமரங்களாவர். எ - று. ஏ இரண்டும் அசை. இ-ம்: கல்வியில்லாதவனும், ஒருவருடைய குறிப்பை அறியாதவனும், ஆற்றிவுடைய மனிதராய்ப் பிறந்தாராயினும், ஓரறிவுடைய மரத்தினுங்கடையாவர். எ-ம்.

----------------

கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி
தானு மதுவாகப் பாவித்துத் -- தானுந்தன்,
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 14

இ - ள். கல்லாதான் கற்ற கவி - (இலக்கணவிலக்கியங்க ளைக் கற்றவர் பிழையற்ற கவியைச் சொல்லிப் பொருள் உரைக்க அதைப் பார்த்துக்கொண்டிருந்து அவைகளைக்) கற்றறியாதவன் (தன்னையுங் கற்றவனாகவே நினைத்துத் தான்) கற்ற (பிழையாகிய) கவியைச் சொல்லிப் பொருள் உரைத்தல், -- கானம் மயில் ஆடக் கண்டு இருந்த வான் கோழி - காட்டில் உள்ள மயிலானது (தனது அழகுள்ள கலாபத்தை விரித்து) ஆட (அதைப்) பார்த் துக்கொண்டிருந்த வான் கோழியானது , --தானும் அது ஆகப் பாவித்து - தானும் அம்மயிலாகவே நினைத்து, --தானும் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற்போலும் - தானும் தனது அழகில்லாத சிறகை விரித்து ஆடினாற்போலும். எ-று. ஏ அசை.
இ-ம்: கற்றவருடைய தொழிலை மேற்கொண்டானாயினுங் கல்லாதவன் கற்றவனாகான் . எ-ம்.

----------

வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி
யாங்கதனுக் காகார மானாற்போல் -- பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரங்
கல்லின்மே லிட்ட கலம். 15

இ - ள். வரிவேங்கைப் புலி நோய் தீர்த்த விடகாரி - வரிகளையுடைய வேங்கைப்புலிக்கு நஞ்சுநோயைத் தீர்த்த விஷ வைத்தியன் -- ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால் போல் பாங்கு அறியா - அப்பொழுதே அப்புலிக்கு இரையானாற்போலத்தான் அழியுந்தன்மையை (ஆலோசித்து) அறியாமல் --புல் அறிவாளர்க்குச் செய்த உபகாரம் - அற்ப புத்தியையுடையவருக்குச் செய்த உபகாரமும், - கல்லின் மேல் இட்ட கலம் - கல்லின் மேலே போடப்பட்ட மட்பாத்திரம் போல் அழிந்துபோம் . எ - று.

இ-ம் . மூடருக்கு உபகாரஞ்செய்யின், அவ்வுபகாரம் அழிவதன்றி, அவ்வுபகாரத்தைச் செய்தவனும் அழிவன். எ-ம்.

விஷஹாரி என்னும் வடமொழி விடகாரி என்றாயிற்று. அதற்கு விடத்தை அரிப்பவன் என்பது பொருள். போல் பாங்கு என்பது போலும் பாங்கு என விரியும்.

கல்லின் மேலிட்டகலம் என்பதற்குக் கல்லின் மேலே தாக்கிய மரக்கலம் போலும் எனப் பொருள் சொல்லினும் பொருந்தும்.

-------------

அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா -- மடைத்தலையி
லோடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு. 16

இ-ள்: கொக்கு - கொக்கானது , --மடைத்தலையில் ஓடும் மீன் ஓட - நீர்மடையினிடத்து ஓடும் சிறுமீன்கள் எல்லாம் ஓட விட்டு , -- உறுமீன் வரும் அளவும் வாடி இருக்கும் - பெருமீன் வரும் வரையும் அடங்கி இருக்கும் : -- (அதுபோல ) - அடக்கம் உடையார் - (தமக்கு எதிரிகளாகத் தகாதவர் எதிர்ப்படினும் ஓடிப் போக விட்டு எதிரிகளாகத் தக்கவர் எதிர்ப்படும் வரையும்) அடங்கியிருக்குங் குணமுடையவரை, -- அறிவு இலர் என்று எண்ணி - அறிவில்லாதவரென்று கருதி, -- கடக்கக் கருதவும் வேண்டா - வெல்லுதற்கு நினைக்கவும் வேண்டுவதில்லை. எ-று. ஆம் அசை.

இ -ம். அடக்கமுடையவரது வலிமையை அறியாது அவரைவெல்ல நினைப்பவனுக்குத் தப்பாது கேடு வரும். எ-ம்.

--------------

அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோ
லுற்றுழித் தீர்வா ருறவல்ல -- ரக்குளத்திற்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
யொட்டி யுறுவா ருறவு. 17

இ-ள்: அற்ற குளத்தின் அறு நீர்ப்பறவை போல் - (நீர் ) வற்றிய குளத்தினின்றும் நீங்கிப்போகின்ற நீர்வாழ் பறவைகள் போல , -- உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - (ஒருவனுக்கு வறுமை) வந்தபொழுது நீங்குவோர் உறவாகார்; --அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே - அந்தக்குளத்திலே கொட்டியும் அல்லியும் நெய்தலும் போலவே , - ஓட்டி உறுவார் உறவு - (தாமும் வருத்தத்தை) அநுபவித்துக்கொண்டு (அவனை) விட்டு நீங்காதவரே உறவாவார். எ - று.
இ-ம்: தாம் செல்வநீங்கி வறியராயவிடத்தும் தம்மைக் கைவிடாதவரையே உறவினராகக் கொள்க. எ-ம்.

--------------

சீரியர் கெட்டாலுஞ் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகுஞ் -- சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகுமென்னாகு
மண்ணின் குடமுடைந்தக் கால். 18

இ-ள்: சீரியர் கெட்டாலும் சீரியரே - மேலோர் (தம்முடைய செல்வங்) கெட்டாலும், மேலோராகவே மதிக்கப்படுவார். --சீரியர் அல்லாதார் கெட்டால் அங்கு என் ஆகும் - கீழோர் (தம்முடைய செல்வங்) கெட்டால், அப்பொழுது அவருக்கு என்ன மதிப்பு உண்டாகும்: -- சீரிய பொன்னின் குடம் உடைந்தால் பொன் ஆகும் - சிறப்பினையுடைய பொன்னால் ஆகிய குடம் உடைந்தாலும் பழைய பொன்னேயாகும்; -- மண்ணின் குடம் உடைந்தக்கால் என் ஆகும் - மண்ணால் ஆகிய குடம் உடைந்தால், (அதற்கு) என்ன மதிப்பு உண்டாகும். எ - று. மற்று அசை
இ-ம்: செல்வம் இழந்த காலத்தினும் மேலோர் நன்குமதிக்கப்படுவர்; கீழோர் செல்வம் இழந்த காலத்தில் அவமதிக்கப்படுவர். எ-ம்.

------------

ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலி
னாழி முகவாது நானாழி -- தோழி

நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன். 19

இ - ள். ஆழ் கடலின் ஆழ அமுக்கி முகக்கினும் - ஆழமாகிய சமுத்திரத்தினுள்ளே முழுக அமுக்கி மொண்டாலும், -- நாழி நால் நாழி முகவாது - ஒரு நாழியானது நாலுநாழி சலத்தை மொள்ளாது. -- (அதுபோல) - தோழி - தோழியே , -- நிதியும் கணவனும் நேர்படினும் - (பெண்களுக்குத்) திரவியமும் நாயகனும் நேர்பட்டாலும் , - தம் தம் விதியின் பயனே பயன் - அவரவருடைய ஊழினளவாகிய பயனே (அநுபவிக்கப்படும்) பயனாகும் . எ - று.

இ - ம். எல்லாப் பொருளுங் கிடைத்தாலும், ஊழினளவே யன்றி அதிகமாக அனுபவித்தல் முடியாது. எ-ம்.

--------------

உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
வுடன்பிறந்தே கொல்லும் வியாதி -- யுடன் பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கு
மம் மருந்து போல்வாரு முண்டு. 20

இ - ள் . வியாதி உடன் பிறந்தே கொல்லும் - வியாதியானது உடன் பிறந்தே கொல்லும் : -- உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா - (ஆதலால்) உடன் பிறந்தவரே துணை யாவோரென்று நம்பி இருக்கவேண்டுவதில்லை. -- உடன் பிறவா மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும் - உடன் பிறவாமல் பெரியமலையில் உள்ள மருந்தே அந்த வியாதியைத் தீர்க்கும், --அம் மருந்து போல்வாரும் உண்டு - (ஆதலால்) அந்த மருந்து போல் (அந்நியராய் இருந்தும் ஆபத்திலே உதவி செய்) வாருஞ் சிலர் உண்டு . எ - று.

இ-ம்: உடன் பிறந்தாருள்ளே தீமை செய்வோரும், அந்நியருள்ளே நன்மை செய்வோரும் உண்டு. எ-ம்.

------------

இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
யில்லாளுமில்லாளே யாமாயி -- னில்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். 21

இ - ள். இல்லாள் அகத்து இருக்க - (நற்குண நற்செய்கைகளையுடைய) மனையாள் வீட்டில் இருப்பாளாயின், -- இல்லாதது ஒன்று இல்லை - (அவ்வீட்டில்) இல்லாத பொருள் ஒன்றுமில்லை , -- இல்லாளும் இல்லாளே ஆயின் - மனையாள் இல்லாமற் போனாளாயினும், -- இல்லாள் வலி கிடந்த மாற்றம் உரைக்கு மேல் - மனையாள் கடுமை பொருந்திய சொற்களைச் சொல்வாளாயினும், -- அவ்வில் புலி கிடந்த நூறு ஆய் விடும் - அவ்வீடு புலி தங்கிய புதல் போல் ஆய்விடும். எ - று. ஆம் அசை.
இ-ம் . நற்குண நற்செய்கைகளையுடைய மனையாள் இருக்கும் வீடே எல்லாப் பொருளும் நிறைந்தவீடு; அஃதல்லாத வீடு யாவருக்குங் கிட்டுதற்கு அச்சத்தை விளைவிக்கும். எ-ம்.

---------

எழுதியவா றேகா ணிரங்குமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமங் -- கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேன்
முற்பவத்திற் செய்த வினை. 22

இ-ள்: இரங்கும் மடம் நெஞ்சே - வருந்துகின்ற அறியாமைபொருந்திய மனமே, -- கருதிப் போய்க் கற்பகத்தைச் சேர்ந்தோர்க்கு - (நல்ல பயனைப் பெறலாமென்று) நினைத்துப் போய்க் கற்பகதருவை அடைந்தவருக்கு -- காஞ்சிரங்காய் ஈந்ததேல் - (அது) எட்டிக்காயைக் கொடுத்ததாயின் -- முற்பவத்தில் செய்தவினை - (அதற்குக் காரணம் அவர்) முற்பிறப்பிற் செய்த தீவினையாகும். -- கருமம் கருதியவாறு ஆமோ - செய்தொழில்கள் (நீ) நினைத்தபடியே ஆகுமோ --- எழுதியவாறே காண் -(கடவுள்) விதித்தபடியே ஆகும் என்று அறிவாயாக. எ - று.
இ-ம்: செய்தொழில்கள் ஊழின்படி யன்றி அவரவர் நினைத்தபடி முடியா . எ-ம்.

-------------

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே -- விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். 23

இ - ள். கயவர் கடுஞ்சினத்துக் கல் பிளவோடு ஒப்பர் -- கீழோர், (தம்முள்ளே) கடுங்கோபத்தினால் வேறுபட்டால், கல்லினுடைய பிளவுகளைப் போல்வர் [திரும்பிக்கூடார்;] -- பொன் பிளவோடு ஒப்பாரும் போல்வார். [அப்படி வேறுபட்டபோது] பொன்னினுடைய பிளவுகளோடு ஒப்பாவாரும் ஒப்பாவர் [ஒருவர் கூட்டக் கூடுவர்;] - சீர் ஒழுகு சான்றோர் சினம் - சிறப்பு மிக்க அறிவுடையோருடைய கோபம் , --வில் பிடித்து நீர் கிழிய எய்த வடுப்போல மாறும் - வில்லைப் பிடித்து (அம்பினாலே சலம் பிளக்க எய்த (அதனுடைய) பிளவுகள் போல (அப்போதே) நீங்கும், எ-று. ஏ இரண்டும் அசை

இ-ம்: கோபத்தினால் வேறுபட்டவிடத்துக் கடையாயார் எக்காலத்துங்கூடார்; இடையாயார் ஒருவர் கூட்டக் கூடுவர்; தலையாயார் பிரிந்த அப்பொழுதே கூடுவர். எ-ம்.

------------

நற்றா மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் -- கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முது காட்டிற்
காக்கை யுகக்கும் பிணம். 24

இ - ள். கயத்தின் நல் தாமரை நல் அன்னம் சேர்ந்தால் போல் - குளத்தில் உள்ள நல்ல தாமரைப் பூவை நல்ல அன்னப் பறவை சேர்ந்தாற்போல் , -- கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்றறிந்தவரைக் கற்றறிந்தவரே விரும்பிச்சேர்வார் -- முதுகாட்டில் பிணம் காக்கை உகக்கும் - சுடுகாட்டிலே கிடக்கின்ற பிணத்தைக் காக்கையே இச்சிக்கும் , -- (அதுபோல) -- கற்பு இலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் - கல்வியில்லாத மூடரை மூடரே கொண்டாடுவர். எ - று.

இ-ம்: கற்றவரோடு கற்றவரே சிநேகஞ்செய்வர், மூட ரோடு மூடரே சிநேகஞ்செய்வர். எ-ம்.

-------------

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையு
மஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு -- நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் காப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 25

இ-ள்: நாகம் தான் நஞ்சு உடைமை அறிந்து கரந்து உறையும் - நல்ல பாம்பு தான் விஷம் உடையதாயிருத்தலை அறிந்து ஒளித்துக்கொண்டு இருக்கும்; -- நீர்ப்பாம்பு அஞ்சாப்புறம் கிடக்கும் - (தன்னிடத்தில் விஷம் இல்லாத) நீர்ப்பாம்பு அஞ்சாமல் வெளியிலே கிடக்கும்; -- (அவைபோல) - நெஞ்சில் கரவு உடையார் தம்மைக் கரப்பர் - மனத்தினுள்ளே வஞ்சனையை உடையவர் தம்மைத் தாமே மறைப்பார் -- கரவு இலா நெஞ்சத் தவர் கரவார் - வஞ்சனை இல்லாத மனத்தை உடையவர் (அப்படித் தம்மை) மறைக்கமாட்டார் . எ - று.
இ-ம்: வஞ்சனையுடையவர் மறைந்தொழுகுவர்; வஞ்சனையில்லாதவர் வெளிப்பட்டொழுகுவர். எ-ம்.

--------------

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் -- மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. 26

இ - ள். மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின் - அரசனையும் குற்றந்தீரக் கற்ற வித்துவானையும் ஆராய்ந்து பார்த்தால்,-- மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன் - அரசனிலும் வித்துவானே சிறப்பை உடையவனாவன். -- மன்னற்குத் தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை - அரசனுக்கு அவனுடைய தேசத்தில் அல்லாமல் (அந்நியதேசங்களிலே) சிறப்பு இல்லை,-- கற்றோற்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு - வித்துவானுக்கு (அவன்) போன தேசங்களெல்லாவற்றினும் சிறப்பு உண்டாகும். எ - று.
இ-ம்: அரசனிலும் வித்துவானே சிறப்புடையன் எ-ம்.

------------

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்ற
மல்லாத மாந்தர்க் கறங்கூற்ற -- மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றங் கூற்றமே
யில்லிற் கிசைந்தொழுகாப் பெண். 27

இ - ள் மெல்லிய வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்-- மெல்லிய வாழைமரத்துக்கு அது ஈன்ற காயே இயமனாகும்; --(அதுபோல) - கல்லாத மாந்தர்க்குக் கற்று

உணர்ந்தார் சொல் கூற்றம் - கற்றறியாத மனிதருக்குக் கற்றறிந்தவருடைய உறுதிக்சொல்லே இயமனாகும்; -- அல்லாத மாந்தர்க்கு அறம் கூற் றம் - (தருமமுடையவர்) அல்லாத மனிதருக்குத் தருமமே இயமனாகும்; -- இசைந்து இல்லிற்கு ஒழுகாப் பெண் கூற்றம் - (கணவன் கருத்துக்கு) உடன்பட்டு இல்லறத்தில் ஒழுகாத மனையாளே (அக்கணவனுக்கு ) இயமனாகும் . எ - று. ஏ அசை.

இ-ம்: கற்றறிந்தவருடைய உறுதிமொழியினாலே கல்லாதவருக்கும், தருமத்தினாலே பாவிகளுக்கும், கற்பு நிலையில்லாத மனையாளாலே கணவனுக்கும் துன்பம் விளையும். எ-ம்.

---------------

சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்துங்
கந்தங் குறைபடா தாதலாற் - றந்தந்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கேட்டான்
மனஞ்சிறிய ராவரோ மற்று. 28

இ - ள். மெல் சந்தனக் குறடு - மிருதுவாகிய சந்தனக் கட்டையானது , -- தான் தேய்ந்த காலத்தும் கந்தம் குறைப் டாது -- தான் தேய்ந்து போன காலத்திலும், (தன்னுடைய) பரிமளத்திற் குறையாது. -- ஆதலால் - ஆதலினாலே , -- தார் வேந்தர் - சேனையை உடைய அரசர்கள், -- கேட்டால் தம் தம் தனம் சிறியர் ஆயினும் - கேட்டினாலே தங்கள் தங்கள் செல்வத்தினாலே குறைந்தவரானாலும் , --மனம் சிறியர் ஆவரோ - மனவலிமையிலே குறைந்தவராவரோ, (ஆகார்.) எ - று.

இ-ம்: அரசர்கள் செல்வத்திற் குறைந்தாலும் மனவலிமையிற் குறையார்கள் . எ-ம்.

-------------

மருவினிய சுற்றமும் வான் பொருளு நல்ல
வுருவு முயர்குலமு மெல்லாந் -- திருமடந்தை
யாம்போ தவளோடு மாகு மவள் பிரிந்து
போம்போ தவளோடும் போம். 29

இ - ள் . மருவு இனிய சுற்றமும் - தழுவிய இனிய உறவும் , -- வான் பொருளும் - மேலாகிய பொருளும், -- நல்ல உருவும் - நல்ல அழகும், -- உயர்குலமும் எல்லாம் -

உயர்வாகிய குலமும் என்னும் இவைகளெல்லாம், -- திரு மடந்தை ஆம் போது அவளோடும் ஆகும் - சீதேவிவந்து கூடும் பொழுது அவளுடனே வந்து கூடும் , -- அவள் பிரிந்து போம் போது அவளோடும் போம் - அவள் நீங்கிப் போம்பொழுது அவளுடனே நீங்கிப்போகும். எ - று.

இ-ம் . சுற்றமும், பொருளும், அழகும், உயர்குலமும் நிலை யுடையனவல்ல. எ-ம்.

------------

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர் -- மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம். 30

இ - ள் . மரம் - மரங்களானவை , -- மாந்தர் குறைக்கும் தனையும் - (தம்மை ) மனிதர் வெட்டுமளவும் , -- குளிர் நிழலைத் தந்து மறைக்கும் - (அவருக்குங்) குளிர்ச்சியாகிய நிழலையே கொடுத்து (வெய்யிலை அவர்மேலே பட ஒட்டாமல்) மறைக்கும் - (அதுபோல) -- அறிவு உடையோர் - அறிவுடையவர், -- சாம் தனையும் தீயனவே செய்திடினும் - (தாம்) இறந்துபோமளவும் (தமக்கு இறந்து போகத்தக்க) தீங்குகளையே (பிறர் ) செய்தாராயினும் , -- தாம் அவரை ஆம் தனையும் காப்பர் - தாம் அவரையும் (தம்மாலே) ஆகுமளவும் (நன்மையே செய்து) காப்பார். எ - று. ஆம் அசை கண்டீர் முன்னிலையசை .

இ-ம்: அறிவுடையவர் தமக்குத் தீங்கு செய்வோருக்கும் நன்மையே செய்வர். எ-ம்.

**வாக்குண்டாமுரை (மூதுரை) முற்றிற்று**

**---------ccccc----------**